மகிழ்ச்சி

நந்தன
ஆவணி

அ 3 ணா

பீடி சக்ரவர்த்தி த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி

RAMSAIT BEEDI
த.பி.சொக்கலால்
முக்கூடல்
ராம்சேட் பீடி

★ உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றதும் ★
★ "பீடிச் சக்கரவர்த்தி" என்று கவர்ண்மெண்ட் பட்டம் கிடைக்கப்பெற்றதும் ★
★ தங்கமெடல் பரிசு பெற்றதும் ★
★ சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பு உண்டாக்குவதும் ★
★ இந்தியா, சிலோன், மலேயா முதலிய ஜலப் பிரதேச நாடுகளில் பிரக்கியாதி பெற்றதும் ★
★ தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு தொழில் கொடுப்பதும் ★
★ காரம், குணம், மணம் நிறைந்ததும் ★
★ எங்கும் எப்பொழுதும் கிடைப்பதும் ★

சொக்கலால் ராம்சேட் பீடியே!

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை
முக்கூடல் P.O. (திருநெல்வேலி ஜில்லா)

M. அருணாசல முதலியார்
CONNEMARA PUBLIC
26 MAY 195

மகிழ்ச்சி இல்லத்தின் கருத்து நிறைந்த வெளியீடுகள்!

நா. சதானந்தம் எழுதியவை:

விதியா? 0—8—0
(இரண்டாம் பதிப்பு)

மனப்புயல் 0—8—0

15 நிமிடங்கள் 0—4—0

ஆ. கந்தசாமி பி. ஏ. எழுதியது:

காமமும் காதலும் 0—8—0

ஜீவா எழுதியது:

சபலம் 0—12—0

ஒரே நேரம் மூன்றுபுத்தகங்கள் வாங்குபவர்களுக்குதபால்செலவு இனம். வி. பி. பி. கிடையாது.

மகிழ்ச்சி இல்லம்,
விருதுநகர்.

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1983—ஆவணி 1.
ஆண்டு 4] 16-8-52 [மாதம் 3

பொருளடக்கம்

நகராசபைத் தேர்தல்	2
இதுநிஜமா? வாகன்	4
சந்தேகம் ஒழிக—ஜாலி	6
சொர்க்கம் —ஏ. வி. பி. ஆசைத்தம்பி	7
காதற்கடல்—தொடர்கதை விருதை மகிழ்நன்	11
வைஜயந்திமாலா	16
தாமஸ் ஆல்வா எடிசன் —R. T ராஜன B. A.	17
நேயர் தபால்	22
தாலி பாக்கியம் —பெ. க. சாமிநாதன்	25
பகவான் எங்கே இருக்கிறார்?	29
நல்லதம்பி—க. பரமசிவன்	30
விசித்திரமாணிக்கம்—மயிலன்	32
இப்பொழுது சொல்லுங்கள் —அ. பிச்சை	37
மூன்றுபிள்ளைகள்—விமர்சனம்	41
ஞா. சோ. போட்டி 5	45
சினிமா செய்திகள்—பெல்	46

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

நகரசபைத் தேர்தல்!

அண்மையில், சென்னை ராஜீய அசம்பிளிக்கும், டெல்லி மக்கள்சபைக்குமாக நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பெரும் சோதனையில் ஈடுபட்டு, இன்று அதன் பலனை அனுபவித்து வருகிறோம். பணத்தைப் பணம் என்று பாராமலும், உடம்பை உடம்பென்று கவனியாமலும், இரவு பகல் என்ற வித்தியாசமின்றி கடும் உழைப்பிற்கிடையில் வெற்றி பெற்றுப் பதவி பெற்றவர்களையும், தோல்வியுற்று இருப்பிடம் தெரியாமல் போனவர்களையும் கண்ணுற்றோம். அதே நேரம் எவ்வித முயற்சியும் எடுக்காமல், சுருங்கக் கூறுமிடத்து துப்பிய இடத்திற்கு மண்ணைக்கூட போடாதவர்கள் மந்திரியானதையும், கவுன்ஸில் மெம்பர்களானதையும் அறிவோம். காணம் என்றால் வாயைப் பிளப்பதும், கடிவாளம் என்றால் பல்லை அழுத்தி மூடுவதுமான பிழைப்புக்கொண்ட கட்சி விட்டுக் கட்சி பாயும் பதவிப் பித்தர்களையும் பார்த்தோம், பார்க்கிறோம். இந்நிலையில் மற்றுமோர் சோதனை சமீபத்தில் நடைபெறவிருக்கிறது.

சென்னை ராஜ்யத்திலுள்ள நகரசபைத் தேர்தல்கள் எல்லாம் 1952 அக்டோபருக்குள் முடிந்து, நவம்பர் முதல்தேதி புதிய நிர்வாகஸ்தர்கள் பதவி ஏற்க வேண்டுமென்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ராஜ்ய நகரசபைகள் பூராவும் 'ஏ' 'பி' என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தேர்தல்கள் நடைபெற கீழ்க்கண்டபடி தேதிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நோட்டீஸ் பிரசுர தேதி: ஏ-பிரிவு 11—8—52; பி-பிரிவு 22—8—52. அபேட்சை மனுக்கள் பெறும் தேதிகள்: (ஏ) ஆகஸ்ட் 19, 20, 21; (பி) செப்டம்பர் 5, 6, 8. மனுக்கள் பரிசீலனை: (ஏ) 22—8—52; (பி) 9—9 52. தகுதியுள்ள அபேட்சகர்கள் பெயர்கள் வெளியிடப்படும் தேதி: (ஏ) 27-8-52 (பி) 13—9—52. அப்பீல்கள் இருந்தால்: (ஏ) 5—9—52; (பி) 17—9—52. வாக்களிப்பு: (ஏ) 16-9-52; (பி) 6-10-52 ஓட் எண்ணப்படுவது: (ஏ) 17—9—52; (பி) 7—10—52.

நகரசபைகளைக் கொண்ட நகர்களின் வயதுவந்த மக்கள் இதை எம் எல் ஏ, எம் பி எலெக்ஷனைவிட மிகவும் முக்கியமும், பொறுப்பும் வாய்ந்த தேர்தல் என்பதை உணரவேண்டும். எம். எல். ஏ. தேர்தல் ராஜ்ய நிர்வாகத்தையும், எம். பி. தேச நிர்வா

கத்தையும் மேற்கொள்ளும் அரசியல் விஷயம். எனவே பல அரசியல் கட்சிகள் கட்டுப்பாடுடன் போட்டியிட்டது நியாயம் மட்டுமல்ல, உலக வழக்கும்கூட. நன்மை தீமைகள் கட்சிகளைத்தான் முதலில் பாதிக்கும்.

ஆனால் நகரசபைகள் என்பது, நகரமக்கள் ஒவ்வொருவரையும் நேரடியாக தொடர்பு கொள்வதாகும். நகரத்தின் சுகாதாரம், நகர சீரமைப்பு, நகர அபிவிருத்தி இவை ஒவ்வொன்றும் நகர மக்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்புடனும் நடைபெறுவதாகும். உதாரணமாக, ஒரு தெருவின் சுகாதாரம் பாதிக்கப்படுமாயின், அத்தெருவின் மக்கள் அனைவருமே அதனால் பாதிக்கப்படுவர்.

எனவே நகர அபிவிருத்தியில் ஈடுபடுவதென்பது, தங்கள் சொந்த வீட்டை கண்காணிப்பது போன்றதாகும். சொந்த வீட்டை அழகுபடுத்துவதில், சீரமைப்பதில், அபிவிருத்தி செய்வதில் குடும்பத்தில் சச்சரவும், கட்சியும் வேண்டியதில்லைதான். பொறுப்பான முன்னோக்கம் கொண்ட ஒருவர்போதும் ஒரு வீட்டிற்கு. முனிஸிபல் எலெக்ஷனில், ஒவ்வொருவார்டும் ஒவ்வொரு குடும்பமாக—ஒரே வீடாக—மாறுகிறது. இதிலிருந்து அந்த வார்டைக் கவனித்துக்கொள்ள, அதிலுள்ள ரோடு, தண்ணீர், சுகாதார வசதிகளை மேற்பார்த்துக்கொள்ள தகுந்த தலைவன் ஒருவனை, தன்னலமற்ற சேவையாளனை நியமிக்கவேண்டிய பொறுப்பு அந்த வார்டிலுள்ள வயதுவந்தவர்களைச் சார்ந்துள்ளது. ஆனால் ஜனநாயகத்தின் பெயரால், ஒரே குடும்பமான ஒருவார்டில் கட்சிபேதங்களைப் புகுத்தி, கட்சிகளின் பெயரால் பலர் போட்டியிடும் சந்தர்ப்பத்தை பல கட்சிகள் வகுத்துள்ளன.

பனை மரங்கள் பத்து நின்றாலும், தூரத்தில் ஒரு ஆலமரம் இருந்தால் அதன் நிழலைத்தான் தேடி ஓடுவர் அறிவுள்ள மக்கள். அதுபோல எந்தக் கட்சியின் பெயரால் யார் நின்றாலும் பரவாயில்லை, உத்தமர்களை, உழைப்பாளிகளை, பச்சோந்தித் தன்மையற்ற உறுதியான பண்பட்டமனத்தினரை வெற்றிபெறச் செய்வது மக்கள் கடமை கட்சியில் பற்றுக்கொண்டவர்கள், பணத்திற்காகவும், பவிசுக்காகவும், காமா, சோமாவென்று கண்டவர்களை எல்லாம் நிறுத்திவிட்டுப் பின் கோட்டை விட்டுக் 'கோவிந்தா' போட்டுத் திரியவேண்டாம்!

ஓட்டர் பெருமக்களே! தயாராகுங்கள், தகுந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க! தகுதி, திறமை வாய்ந்தவர்களைக் கட்சிபேதமின்றி தேர்ந்தெடுத்து உங்கள் நகரின் பெருமையை நிலைநிறுத்துங்கள்!

இது நிஜமா?

[வாகன்]

சிறந்த இன்ஷ்யூரன்ஸ்

கலியாணம் செய்துகொள்ளாதவனுக்கு உயிரில் அதிகப்பிடிப்பு கிடையாது. குடும்ப பாசம் இல்லாததால் மூர்க்கத்தனம்வரும் காலத்தில் குற்றங்களைப் புரிந்துவிடுகிறான், அவன் நஷ்டப்படக்கூடிய விஷயம் உலகத்தில் எதுவுமில்லாததால்.

குடும்பப் பொறுப்பு இல்லாததால் அவனுக்கு சமூகப்பொறுப்பும் இல்லை அவன் தன் ஒருவனுக்காகவே வாழ்கிறான். அதனால் கோபம்மூளும்போது அவனைத் தடுக்கக்கூடிய உலக பந்தம் எதுவும் இருப்பதில்லை

ஆகவே குற்றத்திலிருந்துமனிதனுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சிறந்த இன்ஷ்யூரன்ஸ் கலியாணம்தான்.

—பேராசிரியர் எட்வின் எஸ். பர்டல் U. S. A.

கனவு

காதலை கனவு என்கிறவர்கள் வாழ்க்கை தூக்கமானது.

—நித்திராதேவி

பொருள்

பணம் அழகான நாயை விலை கொடுத்து வாங்கிவிடும். அதன் வாலாட்டுதலை வாங்க முடியுமா? காதல் விலைகொடுத்து வாங்கப்படும் பொருளல்ல.

—ஒரு மெய்க் காதலி.

வித்தியாசம்

காதலை பெருமையாக பேசுகிற பிரமச்சாரிக்கும் மனைவியை கவனியாத நகை வியாபாரிக்கும் என்ன வித்தியாசம்?

—ஒரு மிஸிஸ் ஜுவல்லர்

டெவலப்

காதலும் பிலிமும் இருட்டில் தான் 'டெவலப்' ஆகிறது!

—ஒரு போட்டோகிராபர்

பார்வை

ஆந்தைகளுக்கு மட்டுமா இரவில் கண்கள தெரிகின்றன?—காதலர்களும் பகலில் பார்த்தாலும் பார்க்காதமாதிரிதான் போகிறார்கள்!

—ஒரு பறவை சாஸ்திரி

வாதம்

சம புஜமாக வைக்கப்பட்ட இரு கண்ணாடிகளுக்கு ஊடே ஒரு பொருளை வைத்து விழுகின்ற பிம்பங்களை எண்ணிப் பாருங்கள்! முடிகிறதா? ஆணும் பெண்ணும் சமம் என்று வாதிக்கட்டும் முடிவு ஏற்படுமா?

—ஒரு 'லாஜிக்' மாணவன்

தோற்றம்

சமதூரத்தில் செல்லுகின்ற ரெயில்வே தண்டவாளங்களுக்கு

ஊடேநின்றால் சேருகிறதுபோல் தான் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் சந்திக்கின்றனவா? ஆணும் பெண்ணும் சமமாக வாழ்க்கை நடத்தலாம் என்று எடுத்துச் சொல்லலாம் — செயலில் முடியாது.

—ஒரு ரெயில்வே காங்கிக்கூலி

மலிவு

காதல்—தங்கமுலாம். மலிவு என்பதனால்மட்டுமல்ல, பகட்டாயிருப்பதால்விரும்பப்படுகிறது.

—ஒரு கிலிட் வியாபாரி

தவறு

பகுத்தறிவை பட்டத்தால் நிர்ணயிக்க முடியுமா?—கலியாணத்தை காதல் என்று பொருள் கொள்ளுவது தவறு.

—ஒரு கல்லூரி மாணவன்

கலைவு

பழங்கள்தரா தாவரங்களின் பூக்கள் எப்படி உதிர்கின்றனவோ அப்படித்தான் கல்யாணமில்லா காதல் கலைந்துபோகும்.

—ஒரு பூந்தோட்டக்காரன்

விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்
M. V. ராஜம்மா,
K. R. ராம்சிங்,
C. M. பஷீர் நடித்த
புயல்
(தமிழ்)
2வது வாரம்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

விருதுநகர்
சென்ட்ரலில்
சுதந்திர தினத்தன்று
15—8—52 முதல்
ரஞ்சன், ரெஹ்னா நடித்த
ஷின் ஷினாகி
பூப்லா பூ
(ஹிந்தி)
30—8—52 முதல்
எஸ்.ஏ. நடராஜன், மாதுரிதேவி,
எம். வி. ராஜம்மா நடித்த
★ ஜமீன்தார் ★
(தமிழ்)

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

தங்களின் பெயரால் முனிஸிபா லிட்டிக்கு அன்பளிப்பாக முன்பு கொடுத்த குழாய்களில், இன்று மணிக்கு 3 அல்லது 4 பானைகள் நிறையக்கூடிய பஞ்ச நேரத்தில் இரவு 2 மணி 3 மணி முதலே மக்கள் பரிதவித்துநிற்க, சேவைக் குக் கூலியாக ஐந்து ஏக்கர் நிலம் கேட்கும் தியாகிபோல, தங்கள் தேவைக்கு 5, 6 பானை தண்ணீர் வரிசையைவிட்டு இடையில் பிடிப் பது நியாயமா?

—பி. ஆர். ரத்தினம், விருதுநகர்.

என்று தர்மமென்று கொடுத்து விட்டார்களோ, அன்றே அதைத் தன் பொருள் என்பதிலிருந்து மனதை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள் செய்த உபகாரத்திற்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் எல் லோரையும்போல் ஒருபானை, ஆனால் அவர்கள் வந்த நேரம் பிடித்துக் கொள்ள அனுமதிப்பது உயர்ந்த பண்பு. இதை இருசாராரும் உணர வேண்டும். இதுதான் நியாயம் என்றும் தோன்றுகிறது.

திரு. என். எஸ். கிருஷ்ணனின் வாழ்க்கை வர்ணனையை மகிழ்ச்சி யில் வெளியிட இயலுமா?

—எம். மனோகரன், பாபநாசம்.

அதற்குரிய சந்தர்ப்பம் வரும் பொழுது அவசியம் எழுதப்படும். கவலைவேண்டாம்.

நீங்கள் வலது சாரியா? இடது சாரியா? இடது சாரிக்குள்ளும் காந்தீய பாதையைச் சேர்ந்தவரா? மார்க்ஸீயப் பாதையைச் சேர்ந்த வரா?

—'விருதை வேலன்' விருதுநகர்.

ஐயா வேலவரே, ஐ ஆம் வெரி சாரி! நான் 'சம்சாரி'. மகிழ்ச்சிய பாதையைச் சார்ந்தவன்

சினிமாத்தொழிலில் பணமிகுதி யாகச் சேர்த்த லாபவான்கள் இந் நாட்டின் ஏழ்மையைப் போக்க, தொழில் ஸ்தாபனங்கள், அறிவுக் கூடங்கள்முதலிய பொதுநன்மைக் காரியங்கள் செய்தால் அவர்கள் பெயர்கள் என்றும் அழியாப்புகழ் அடையுமே? இவ்வித அன்புப் பணி புரிவார்களா?

–டி.செல்வரத்தினம், தூத்துக்குடி.

பணம் சேர்ந்தால்மட்டும் போது மா? மனம் வேண்டாமா? வேறு ஒன்றும் அவர்கள் செய்யவேண்டாம் உயர்ந்தகருத்துக்களைப் போதிக்கும் படங்களை ஆபாசமின்றி எடுத்து வெளியிட்டால் போதும். அதுவே அவர்கள் நாட்டுக்குச் செய்யும் அள வற்ற உதவி.

சென்னை சர்க்கார் வெளியிட்ட ஐந்து கோடி ரூபாய் கடன் வெளி யீட்டிற்கு பணம் கொடுத்தவர்கள் அனைவரும் நாட்டுப்பற்றுடன்தான் கொடுத்தனரா?

—த. ஆனந்தன், தஞ்சை.

நாட்டுப்பற்று உண்டோ இல்லை யோ, ஆனால் பணப்பற்று உண்டு. இன்றுநாட்டில் பொருள்களின் விலை வாசிகள் இறங்கிவருகிறது. கூடுதல் வட்டியுடன், பொறுப்பான இடத் தில் ரூபாயாக இருந்தால் மதிப்பு என்றும் குறையாதல்லவா!

சொர்க்கம்!

[ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

"ஆவணி மாதமாம், ஆவணி! நானறிய எட்டு ஆவணி மாதம் வந்துவந்து போய்விட்டது! ஆவணி மாதத்திலே அவனியெல்லாம் கல்யாணம் நடக்கிறது. ஆனல் எனக்கு?

கல்யாணத்தையும் காணேம்! கருமாதியையும்காணேம்! எனக்கென்று ஒருவன்கூடப் பிறக்கவில்லையா? பாழாய்போன 'பிரமன்' என்னை ஏன் படைத்தான்? அதிலும் பெண்ணுகப் படைத்தானே, பாபி!

ஊருக்குள்ளே யார்யாருக்கெல்லாமோ கல்யாணம் நடக்கிறது நான் பருவமடைந்தசமயத்திலே பாவாடை சட்டை போட்டுத் திரிந்த பார்வதிக்கு, இன்று கையிலே ஒரு குழந்தை! வயிற்றிலே ஒரு குழந்தை!

என்னை 'அக்கா' என்றழைக்கிற அடுத்தவீட்டு அம்புஜத்திற்கு அதற்குள் ஏழு குழந்தைகள் நல்லதங்காளைப்போல!

நானறிய தெருவில் தாவிக்குதித்து விளையாடிய சின்னஞ் சிறுசுகளெல்லாம், இன்று 'தாய்' ஆகிவிட்டார்கள்! நான் தவியாய் தவிக்கிறேன்! ஒரு பாவிகூட என்னைப் பத்தினியாக்கிக்கொள்ள இன்னும் முன்வரவில்லை.

நான் என்ன அழகில்லையா? அம்மாகூட நான் கோவிலுக்குப் போகும்போது என்னை முறைத்துப் பார்ப்பவர்களுக்கு கணக்கு உண்டா? கருத்தப் பெண்களெல்லாம் 'கரை' ஏறிக்கொண்டே இருக்கிறார்கள்!

ஓட்டை ஓடசல்கள் விலை போகின்றன! உயர்ந்த சரக்கு முடங்கிக் கிடக்கிறது! ம்! உலகம் கெட்டுப்போச்சு! இல்லாவிட்டால் சிவந்த மேனியுடைய எனக்கு, இந்த எட்டு வருஷத்திலே ஒரு கருப்பனுவது கணவனுக வந்திருக்கமாட்டானு?

பெற்றோர்களாம்பெற்றோர்கள் தக்க காலத்தில் தன் பெண்ணுக்குக் கல்யாணத்தை முடிக்க முடியாதவர்கள் பெண்ணை ஏன் பெறுகிறார்கள்? பெண்ணைத்தான் பெற்றார்களே, எனக்குக் கணவனை விலைக்கு வாங்க, கையிலே 'பொன்னை' வைத்திருக்க வேண்டாமா?

அழுகிப்போகிற கத்தரிக்காய் விலையே வீசை ஆறணு என்று இருக்கும்போது, கணவன் விலை ஆயிரத்திற்கு கம்மியாகவா இருக்கும்? கருத்தப் பெண்ணை கட்டிக்கொள்ளும் கணவர்களின்விலை எழுபதாயிரம், எண்பதாயிரம்

என்று ஏறி இருக்கிற காலமல்லவா இது! ஆயிரமாவது கையிலே இல்லாவிட்டால் 'ஆண்டி' கூட கிடைக்கமாட்டான்! இப்படி இல்லாமலா எட்டுவருஷமாக நானும் 'வெறும் கட்டை'யாக இருக்கிறேன்?

என்பெற்றோர்கள்தான் என்ன செய்வார்கள்? பணம் என்ன நிலையான பொருளா? உருண்டு ஓடுவதுதானே பணத்தின் குணம்? இன்றைய லட்சாதிபதி நாளைய 'இன்சால்வெண்ட்' பேர்வழியாகிறான்! இந்த நிலையிலே பணத்தை எப்படி பத்திரப்படுத்தமுடியும்? என் தந்தையும் 'பாப்பர்' ஆக இருக்கிறார்; நானும் 'கேட்பார்' அற்று வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறேன்!

எனக்கு சுதந்திரம் கொடுத்திருந்தால்கூட இதற்குள் ஒரு சுந்தர புருஷனை தேடிப்பிடித்திருப்பேன்! இல்லாத சுதந்திரத்திற்கு ஏன் இந்தப்பேச்சு? இன்று நான் வாழா வெட்டி! எட்டு வருடமாக பட்டுக் கிடக்கும் மொட்டை மரம்!

ஏதோ பேய் பிசாசு இருக்கிறது என்று நம்புகிற சில பேயர்கள், மரங்களிலே ஆணி அடிக்கிறார்களல்லவா? அதைப்போல தான் மொட்டை மரமாக நின்ற என்மீது "சனியனாகப் பிறந்திருக்கிறாள்! இவள் தரித்திரம் குடும்பத்தையே குலைக்கிறது! இவள் செத்தால்தான் நமக்கு விமோசனம்!" என்றெல்லாம் பேசி என்மீது ஆணி அடித்து சித்திரவதைசெய்தார் என்தந்தை

என்னைப் பெற்ற தந்தையே என்னைச் சாகச்சொல்லும்போது எனக்கு வாழ்வு எதற்கு? கட்டுப்பாடும் தடையும் நிறைந்த பூட்டப்பட்ட வீட்டுச் சிறையில் சித்திரவதைப்படுவதைவிட சதா திறந்திருக்கும் நரகத்திலே சந்தோஷமாக இருக்கமுடியுமே!"

* * * *

விமலா விம்மியழாத நாளே கிடையாது! இப்படிப் பலபல எண்ணி, தினமும் கண்ணீர் விடுவாள்.

ஆனால்—அவள் பெற்றோர்கள் தான் என்ன செய்ய முடியும்? வாடகை வீட்டிலே இருந்து கொண்டு வறுமைத்தீயிலேவாடிக் கொண்டிருந்தார்கள். போதாக் குறைக்கு, துட்டுள்ளகாலத்திலே விமலாவின் தந்தை மோசமான நடத்தையுடைய குடிகாரன்என்ற கெட்ட பெயரும் இருந்தது. இரண்டு நாணயமும் அற்றகுடும்பத்திலே எவன் பெண் எடுக்க வருவான்?

விமலா கனிகொடுக்கும் விருச்சந்தான்! ஆனால் அந்த விருச்சத்தைச் சுற்றி விஷப்பாம்பு நிற்கும்போது எவனாவது அருகில் வருவானா? இதனால்தான் எட்டு வருடமாக, கருகும் மொட்டாக இருந்தாள், கட்டழகி விமலா! ஆனால்...

"யாருடைய அதிர்ஷ்டமோ? வயோதிகபுரி மிட்டாதார் விமலாவை கேட்டுவரச் சொன்னார்! சரிபின்னு சொல்லுங்கோ! ஆவணி பன்னிரண்டில் முகூர்த்தம் வச்சுடலாம்!" என்று திடீரென்று அன்று வந்த கல்யாணத் தரகன் கூறினான்.

"சனி விட்டது" என்ற கருத்தில் சரி சொன்னார் விமலாவின் தந்தை. கல்யாண ஏற்பாடெல்லாம் தடபுடலாக நடந்தது. ஒரு கல்யாணம் வரவில்லையே என்று வருத்தப்பட்ட விமலா, வயோதிகபுரி மிட்டாதாரோடு கல்யாணம் என்றவுடனே, ஏனோ மகிழ்ச்சியாக இருக்கவில்லை.

நாளை காலை கல்யாணம். அன்றிரவு குலதெய்வத்தை கும்பிட்டுவிட்டு, விமலாவின் தந்தை வீட்டுக்கு வந்தார். விமலாவுக்கென்று மிட்டாதார் அனுப்பிய நகையைக் காட்ட விமலாவைத் தேடினார் அவள் தந்தை. ஆனால்...

விமலாவைக் காணவில்லை; அடுத்த வீடு, பக்கத்து வீடு தேடினர். அவளைக் காணவே இல்லை! ஆனல்—விமலாவின் கடிதமட்டும் கண்டெடுக்கப்பட்டது.

பெற்றோரே!

சனி விட்டது; சந்தோஷமாகவாழுங்கள்! கல்யாணமின்றி எட்டு வருடங்களை கழித்துவிட்டேன்; இனி ஒரு 'குடுகுடு' கிழவனான மிட்டாதார் தேவையா? நாலாந்தாரமாக 'தாத்தா'வைக் கட்டிக்கொண்டு எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறேன்? என் உயிரை நான் மாய்த்துக்கொண்டு 'சொர்க்கம்' செல்ல தீர்மானித்துவிட்டேன்! ஆறு—குளம்—கிணறு ஆகிய ஏதாவது ஒரு சொர்க்க வாசலிலே இந்த இரவே புகுந்துவிட புறப்பட்டுவிட்டேன். என்னைத் தேடவேண்டாம். விமலா.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் அலறியடித்துக்கொண்டு எல்லோரும் ஓடினார்கள். ஆறு, குளம், கிணறு ஆகிய இடங்களிலே தேடினார்கள். விமலா கிடைக்கவே இல்லை.

மறுநாள் சூரியன் உதயமானான்; ஆனல் திடீரென்று அஸ்தமித்த விமலா உதயமாகவில்லை! விமலாவின் தந்தை போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார். "நேற்று இரவில் இருந்து என் மகள் விமலாவைக் காணவில்லை" என்று புகார் செய்தார்.

"விமலா உம் மகளா? ஆதரவற்ற அனாதை என்று சொன்னாளே?"

"எங்கே இருக்கிறாள்? காட்டுங்களேன்!"

"நேற்றிரவு தற்கொலை செய்ய முயன்றாள்; பிடித்துவந்தோம்! ஏ, 144! லாக்கப்பில் இருக்கும் அந்தப்பெண்ணை அழைத்துவா!"

சப் இன்ஸ்பெக்டரின் உத்திரவுப்படி போலீஸ்காரர் அந்தப் பெண்ணை அழைத்துவந்தார்.

இரயில்வே போர்டுகளில் இந்தி ஒழிப்பு ஆகஸ்ட் கிளர்ச்சிபற்றி உங்கள் கருத்தென்ன?

ரேடியோவில் சினிமா ரிக்கார்டுகள் நீக்கப்படுவதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தனித்தனியாக
கார்டில் சுருக்கமாக எழுதி
அனுப்புங்கள் — பிரசுரிக்கப்படும்!

"இவள்தானைய்யா என் மகள் விமலா. அழைத்துப்போக அனுமதி கொடுங்கள்! முகூர்த்தம் தவறிவிடப்போகிறது!"

"முகூர்த்தமா? எது தவறினால் எனக்கென்ன? தற்கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக அவள்மீது வழக்குத் தொடரப் போகிறோம்!"

"இல்லையா! விட்டிடுங்க. இனிமேல் அப்படிச் செய்ய மாட்டாள்!"

இப்படி விமலாவின் தந்தை சப் இன்ஸ்பெக்டரிடம் கெஞ்சினார். ஆனால்...

"என்னை வெளியே விடாதீர்கள்! விட்டால் கண்டிப்பாக தற்கொலை செய்வேன்" என்று விமலா தைரியமாகச்சொன்னாள்.

"ஏ, 144! இவளைக் கொண்டு போய் சிறையில் அடை" என்று சப் இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார்.

விமலா மலர்ந்த முகத்துடன் புன்னகையோடு புகுந்தாள் சொர்க்கம்!

FOR SALE

Latest Model
New Remington Strong
and Streamlined Portable
"PERSONAL" Typewriter.
Offered for Rs 475 or the nearest offer. Apply to:
Door No. 8, Senthivinayagapuram, Virudhunagar.

தனி அரசு

மாதம் இருமுறை. 10-25 தேதிகளில் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்:
A. V. P. ஆசைத்தம்பி

* ஆணித்தரமான அரசியல்
* ஆராய்ச்சிக் கட்டுரை
* புது எழுத்தாளர்களுக்குப் போட்டி
* புதுமையான புரட்சி நடை

தனிப்பிரதி 2 அணா
ஆண்டுச் சந்தா ரூ. 3

ஏஜண்டு இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:
தனி அரசு :: விருதுநகர்.

26 MAY 1955

காதற்கடல்

தொடர் கதை :: விருதை மகிழ்நன்

32வது அத்தியாயம்

சரணாகதியா? சாகசமா?

ஸ்கூல் மானேஜர் கூறியபடி அன்றுமாலை சாரு அவருடைய வீட்டிற்குச் சென்றாள். அங்கு நின்ற வேலைக்காரனிடம் தனது வரவை மானேஜரிடம் கூறும்படி சொல்லி அனுப்பினாள். அவன் சென்று திரும்பிவந்து, அவளை மானேஜரின் தனி அறை ஒன்றிற்கு அழைத்துச் சென்று ''இங்குஉட்கார்ந்திருங்கள். எஜமான் இப்பொழுது வந்துவிடுவார்'' என்று கூறிச் சென்றுவிட்டான்.

சாருவிற்கு மனம் 'திக்திக்' என்று வேகமாக அடித்து ஒரு வித பயத்தை உண்டாக்கியது. களேபரத்துடன் உட்கார்ந்திருந்தாள். நிமிஷத்திற்கொருமுறை முகத்தைத் துடைத்தும், வியர்வை முத்துமுத்தாகக் கிளம்பிக் கொண்டே இருந்தது.

அழகுற அமைந்திருந்த அந்த அறையின் மத்தியில் ஒரு பெரிய மேஜையும், அதைச்சுற்றி நாற்காலிகளும்போடப்பட்டிருந்தன. மானேஜரின் நாற்காலி என்பதைத் தனித்துக் காண்பிக்கும் தோரணையில் மெத்தையிட்ட சுழல்நாற்காலி மேஜையின்முன்னால் இருந்தது. மேஜைக்கு நேர் மேலாக காற்றாடி அமைக்கப்பெற்றிருந்தது. மூன்றுநான்கு நாட்களாக அவ்வறை சுத்தம் செய்யப்படவில்லை என்பதும் அங்கு படிந்திருந்த தூசியிலிருந்து புலனாகியது.

இவற்றைஎல்லாம் மேலெழுந்தவாரியாகக் கவனித்த சாருவின் கண்கள் மேஜையின் அடியில் இருந்த கழிவுதாள்கூடையையும் கவனிக்கத்தான்செய்தன. அவள் பார்வை அங்கு சென்றதற்குக் காரணம் அக்கூடை நிரம்பி, அதைச் சுற்றிலும் சிறுசிறு பந்து போன்று கசங்கிய காகிதங்கள் நிறையக் கிடந்தன. கிடந்த அத்தனையும் ஏறக்குறைய ஒரேமாதிரி பருமனில் தென்பட்டன. இதைக் கவனித்தபோது சாருவின் மனம் எதையோ நினைத்து ஊசலாடியது. அவற்றில் ஒன்றை எடுத்துப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது

ஆனால் இருக்க இடத்தைவிட்டு எழுந்திருக்கவே இயலாதபடி பயம் கௌவிக்கொண்டது.

இந்நேரம் நீம்பலாக மூடியிருந்த ஜன்னல் கதவுகளை படார் என்று திறந்துகொண்டு பேய்க் காற்றுஒன்று வீசியது. இதனால் அறையில் படிந்திருந்த தூசி 'குப்'பென்று கிளம்பியதுடன் கூடையின் அருகில் கிடந்த காகிதப் பந்துகளும் உருண்டுஓடின. அவற்றில் சில சாருவின் காலடியில்வந்து சரணடைந்துநின்றன.

மெதுவாகக் குனிந்து அவற்றில் ஒன்றை எடுத்துக் கைகள் நடுங்க, மனம் பதற மெதுவாகப் பிரித்தாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. உடம்பும்,கையும் அதிக ஆட்டம் கொண்டது. மற்றொன்றைஎடுத்துப் பிரித்தாள்; அதுவும் ஏறக்குறைய முந்தியதைப் போலவே எழுதிப் பின் கிறுக்கிஇருந்தது. அறைக்கு வெளியில் தன் பார்வையைச்செலுத்திவிட்டு, மெதுவாக அந்த இரண்டையும் மடித்துத் தனது ஜாக்கெட்டிற்குள் மறைத்துக்கொண்டாள்.

இந்நேரம் யாரோ அறையை நோக்கி வரும் செருப்புச்சப்தம் கேட்கவே, காலடியில் கிடந்த மற்ற காகித உருண்டைகளைக் காலால் அப்புறம் தள்ளிவிட்டு, நிமிர்ந்து உட்கார்ந்தாள் சாரு. உடம்பில் ஒருவிதத் தெம்பும், திடமும் ஏற்பட்டது.

"சாரு...உன்னை நீண்டநேரம் காக்கவைத்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே உள்ளேநுழைந்தார் மானேஜர்.

"அப்படி ஒன்றுமில்லை" என்று கூறி எழுந்துநின்றாள் சாரு.

"நான்கு நாட்களாக வீட்டில் ஆள் இல்லாமல் ரூம் கிடக்கிற லக்ஷணத்தைப் பார்" என்று கூறிக்கொண்டே சிதறி ஓடிக் கிடந்த காகிதச் சுருள்களை முதலில் பொருக்கி கூடைகளில் அமுக்கினார்.

"சாரு . ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரேன்" என்று தன் எதிரில் கிடந்த நாற்காலியைக் காட்டினார்.

"இல்லை...இப்படியே நிற்கிறேன்...வக்கீலைக் கலந்தீர்களா? அவர் என்ன சொன்னார்?"

"வக்கீலிற்கு ஆள் அனுப்பினேன்...நின்றுகொண்டே இருக்கிறாயே! இப்படிஉட்கார்! காபி கொண்டுவரச்சொல்லட்டுமா?"

"இல்லை...அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்...இப்பொழுது விஷயத்தைச்சொன்னால்போதும் ஒருசமயம் என் தகப்பனார் என்னைத் தேடி வந்தாலும் வரக் கூடும்...வக்கீல்......"

"ஏன் இவ்வளவு பதட்டத்துடன் பேசுகிறாய்? வக்கீல், வீட்டில் இல்லையாம்! வந்தவுடன் வரச்சொல்வதாக அவர் குமாஸ்தா சொல்லியனுப்பியிருக்கிறார்"

"அப்படியா...கேட்டு வையுங்கள். நானே என் தகப்பனரை வரச்சொல்லுகிறேன். நான் வருகிறேன். வணக்கம்..."

"சாரு என்ன அவசரம்? கொஞ்சம பொறு.. எனக்கொரு யோசனை தோன்றுகிறது"

"என்ன?...கூறுங்கள்..."

"போலீஸில் கம்ளேண்டு செய்வதென்னமோ எனக்குப் பிடிக்கவில்லை. நம் பல்லைக் குத்தி நாமே நாற்றம் பார்ப்பது போல் தோன்றுகிறது"

"புரையோடிக் கிடக்கும் புண்ணைக்கீறித்தானே ஆகவேண்டும்"

"அதனுல்நேரும் வேதனை..."

"வேதனையை நினைத்தால் வீணர்களின் கொட்டத்தை அடக்குவது எப்படி? ஒரு அபலையின் வாழ்வைப் பாழ்படுத்த நினைக்கும் சண்டாளனை, சதிகாரனை, சமூகத் துரோகியை சந்திக்கிழுப்பது எப்படி?"

"சாரு! ஏன் இவ்வளவு வேகம்...நான் ஒன்றும் வித்தியாசமாகக் கூறவில்லையே!..."

"வித்தியாசமாகக் கூறவில்லை! ஆனல் விபரீத நடவடிக்கைகள் புரியும் ஆண்வர்க்கத்திற்கு வக்காலத்து வாங்குகிறீர்கள்..."

"சாரு..."

"சார்! போதும் நிறுத்துங்கள்! என் மனம் மிகவும் வேதனையடைந்துள்ளது. ஆத்திரம் குமுறி எழுகிறது"

"சாரு! யாரிடம் பேசுகிருய் என்பதை மறந்து பேசுகிருய்"

"நான் வேலை பார்க்கும் பள்ளி மானேஜரிடம் பேசுகிறேன் என்பது எனக்கு நன்கு தெரிகிறது சார்! அதுமட்டுமல்ல, மானேஜரின் வீட்டில், அவரது தனி அறையில், தனிமையில் நின்று பேசுகிறேன் என்பதும் அறிவேன். அதற்காக அதர்மத்திற்குத் தலை வணங்குவதா?"

"வேண்டாம்...ஏன், நீ ஒரு கல்யாணம் செய்துகொண்டால்"

"அது என் சொந்தவிஷயம்"

"சொந்த விஷயம்தான்...... கல்யாணம் செய்துகொண்டால், இப்படி ஏதாவது வந்தாலும் பாதகமில்லையல்லவா?"

"சார்! உங்கள் போதனை புதிதாக இருக்கிறதே! கற்பு என்பது கடைச் சரக்கு என்று நினைத்தீர்களா? அதிக நேரம் நின்றுபேச நான் விரும்பவில்லை வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டாள்.

உடனே மானேஜர் எழுந்து வாசலில் போய் மறித்து நின்றுகொண்டு "சாரு! இவ்வளவு தூரம் கூறியும் புரிந்துகொள்ளவில்லையே. நான்...உன்னை..."

"நன்ருகப் புரிந்துகொண்டேன். என் தனிமை உங்களுக்கு இவ்வளவு வீரத்தைக் கொடுத்துள்ளது. இதற்குத்தான் என்னைமட்டும் வரச்சொன்னீர்களோ இதுதான் பெரிய மனிதர்களின் பெருந் தன்மையோ? பேஷ்!

பொதுநலப் பணியில் இப்பேர்ப்பட்ட புண்ணியாத்மாக்கள் நான்குபேர் இருந்தால் போதும்...''

"சாரு! அதிகம் பேசாதே! இப்பொழுது எங்கிலையில் இருக்கிருய் தெரியுமா?''

"கோரப்பசிகொண்ட கொடும் புலியின் பார்வையில் சிக்கிய மான்போல நிற்கிறேன், உமது காமப் பசி முன்''

"நன்ருகக் கூறிஞய்! தகுந்தபடி நடந்துகொள். வீண்பிடிவாதத்தால் அவமானத்தைத் தேடிக் கொள்ளாதே! உன்மீது எவ்வளவு காதல் கொண்டுள்ளேன் தெரியுமா?''

"உமது ஊத்தைவாயால் அப்புனிதமான வார்த்தைக்கு கலங்கம் தேட வேண்டாம். தயவு செய்து வழிவிடுங்கள். ஒரு அபலையின் வாழ்வைக் கெடுக்க வேண்டாம். உங்களுக்கு அக்காள், தங்கை இல்லையா?''

"வேதாந்தம்வேண்டாம் சாரு! பசித்தவனுக்குத் தேவை உணவு! இதோ பணம். வேண்டிய அளவு கொடுக்கிறேன்''

"ஏழையின்கற்புஎன்பது விலைகூறும் பொருளாகிவிட்டதோ?''

"இந்நேரம் இங்கிருந்து நீ தனித்துப் போவதைக் கண்டால் ஊரிலுள்ள மக்கள் என்ன பேசுவார்கள் தெரியுமா?''

இம்மூர்க்கனிடமிருந்து இனி தப்பமுடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டாள்சாரு. நேரமோ இருட்டிக்கொண்டுவந்தது. ஒருசமயம தன்தகப்பஞர் தேடி வரலாம் என்று எதிர்பார்த்தாள். அவரும் வரவில்லை. எனவே "சார்! இந்த உடல்தானே உங்களுக்கு வேண்டும்! தாராளமாக எடுத்துக்கொள்ளுங்கள்''

"சாரு! உண்மையாகவா? இப்பொழுதுதான் நீ புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுகிருய்'' என்று பல்லை இளித்துக் கொண்டுமெதுவாகநெருங்கிஞர்.

"ஆமாம்...என்னை கல்யாணம் செய்துகொள்வீர்களல்லவா?''

"கல்யாணமா? அதுதான் எனக்கு என்றே முடித்துவைத்துவிட்டார்களே! நான்கு குழந்தைகள்கூட இருக்கின்றனவே! நீ என் காதற்கிழத்தி''

"ஓ! கோவலனுக்குக்கிடைத்த மாதவிமாதிரி''

"இல்லை! அதைவிட ஒருபடி உயர்வாக''

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி. அன்பரே ஒரு விண்ணப்பம். அதுவும் உங்கள் நன்மையை உத்தேசித்து. இப்பொழுதுநேரமாகிவிட்டது. என்தந்தை இப்பொழுது வந்துவிடுவார். இவ்வளவுநேரம் உங்களிடம் வாதம் புரிந்ததால் என் மனம் மிகவும் புண்பட்டுள்ளது. இன்றுபோய் நாளை அவசியம் வருகிறேன். என்னை நம்புவீர்களா?''

"ஓ! அதற்கென்ன? ஆனல் என்னை ஏமாற்ற மாட்டாயே?''

"ஏமாற்றுவதா? எத்தனைகாலைக் குத்தான் உலகஇன்பத்தை மறந்து, உண்டும், உண்ணாமலும், தரித்திர நிலையில் காலந்தள்ள முடியும்? நீங்கள் நினைத்தால் என்னை இந்திர போகத்தில் வைக்கலாமே!"

"சாரு!" என்று கூறிக்கொண்டே அவள் கையைப் பற்றினார். அவள் அதைத்தடுக்கவில்லை. மெதுவாக தன் முகத்தை அவள் முகத்தருகில் கொண்டுசென்றார். அப்பொழுதுஅவள் "அன்பரே! கிணற்று நீரை வெள்ளமா கொண்டு சென்றுவிடும்? உங்கள் பள்ளியில் வேலை பார்க்கும் நான் ஓடியாவிடுவேன்?"

இந்நேரம் வெளியில் யாரோ வரும் சப்தம்கேட்கவே, இருவரும் விலகிநின்றார்கள். வேலைக்காரன் சாருவின் தந்தையை அழைத்துக் கொண்டு அங்கு வந்தான்.

"சார் வரவேண்டும்! வரவேண்டும்! எல்லா விஷயங்களையும் சாருவிடம் கூறியுள்ளேன். வேறுவேலையாக வெளியில் சென்றிருந்தேன் இப்பொழுதுதான் வந்தேன். அதனால்தான் இவ்வளவு நேரமாகிவிட்டது. சாரு! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கிறதா? நாளை மறந்துவிடவேண்டாம்"

"வக்கில்......" என்று அவள் தந்தை ஆரம்பிக்குமுன் "எல்லாம் அவளிடம் கூறியிருக்கிறேன். நாளை நேரில் சாருவை வக்கீல் சந்திக்கவேண்டுமென்று கூறுகிறார். என்ன சாரு......"

"ஆமாம்அப்பா! வீட்டிற்குவாருங்கள் விஷயத்தைக் கூறுகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு திரும்பினார்கள். (தொடரும்)

குதூகல ஆரம்ப விழா!

விருதுநகர்

நியூ முத்துவில்

22—8—52 முதல்

T. R. மகாலிங்கம்,
V. K. ராமசாமி,
T. K. ராமச்சந்திரன்,
G. சகுந்தலா,
வரலக்ஷ்மி நடித்த

சின்னத்துரை

(தமிழ்)

வடுவூராரின் நாவல்

அடுத்து
வர இருப்பவை:

கல்யாணம் பண்ணிப்பார்

(தமிழ்)

எனெஸ்கேயின்

பணம் (தமிழ்)

அட்டைப் படம்: ★ வைஜயந்திமாலா ★

இவ் ஆவணி மகிழ்ச்சியின் முன் அட்டையில் மகிழ்ச்சி பொங்கி வழியும் வதனத்துடன், முத்துப் பற்களைக் காட்டி, கருவண்டுக் கண்களால் காந்தப் பார்வையை வீசிக், கைகொட்டிக் காட்சி கொடுத்து நிற்பவர் செல்வி **வைஜயந்திமாலா**வாகும். இவர் 1933ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 13ம் நாள் மைசூரில் பிறந்தவர். இவருடைய தாயார் பிரபல சினிமா நடிகையும், ஜெமினி 'மங்கம்மா சபதம்' புகழ் நட்சத்திரமுமான வசுந்தரா தேவியாரும். தந்தை திரு. எம். டி. ராமன். தாயைப்போல் பிள்ளை என்றபடி, இவர் சிறுவயது முதலே நாட்டியங்கள் பயின்றுவந்தார். இவர் பிறந்தது மைசூர் ஆனாலும் வளர்ந்தது சென்னையே. சிறுவயதில் தாயாருடன் மேல்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார். இவரது நடன ஆரம்ப ஆசிரியர் திரு. சின்ஹா. பின்பு வடுவூர் திரு. ராமையா. தற்சமயம் திரு. தண்டாயுதபாணி. வைஜயந்திக்கு பரதநாட்டியம், மணிபுரி, கதக்களி, மார்வாரி நடனம், வெளிநாட்டு நடனங்கள் முதலியன தண்ணீர்பட்டபாடு. இவரை முதலில் திரை உலகில் புகுத்தியவர் திரு. ஏ. வி. மெய்யப்பன். தனது முதல் படமாகிய "வாழ்க்கை"மூலம், எடுத்த எடுப்பிலேயே நட்சத்திரப் பதவியை அடைந்தவர் இவர் ஒருவர்தான் என்றால்கூட மிகையில்லை. இவர் அப்படத்தில் "டடடா" பாட்டுப் பாடி, ஆடியது நேயர்கள் என்றும் மறக்க முடியாத காட்சியாகும். பின்பு இப்படம் தெலுங்கில் "ஜீவிதம்" என்ற பெயரிலும், ஹிந்தியில் "பஹார்" என்ற பெயரிலும் வெளிவந்து இவரை அகில இந்திய நட்சத்திரமாக்கிவிட்டது.

நளினமிக்க நடனங்களையும், குழந்தைபோன்ற கொஞ்சும்பாணியில் பேசும் தோரணையையும் கொண்ட வைஜயந்தி இண்டர்வரை படித்துள்ளார். இவருக்கு இங்கிலீஷ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலிய பாஷைகள் நன்கு தெரியும். இவர் சென்னையில் "நாட்டிய மாலா லயா" என்ற பெயரில் நடனப்பள்ளி ஒன்று நிறுவி பல பெண்களுக்குப் போதித்துவருகிறார். இவரது முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர், இருப்பவர், இவரது பாட்டி யதுகிரி தேவியாரும். இவரது தாயாருக்கும் தகப்பனாருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக, வைஜயந்தி தந்தையுடனும் பாட்டியுடனும் வசித்துவருகிறார்.

அமெரிக்க அறிஞர்கள் வரிசை 3

மின்சார மேதை

தாமஸ் ஆல்வா எடிசன் 1847-1931

[R. T. ராஜன் B. A.,]

அன்றொருநாள் திடீரென மின்சாரம் நின்றுவிட்டது. காற்றாடி சுழலவில்லை. விளக்குகள் எரியவில்லை. காற்றாடி ஓடாவிட்டால் வேலை ஓடாதென சிலர் புழுங்குகின்றனர். வீட்டில் சமையலறையில் விளக்கெரியாததால் சமையலும் இருளடைகிறது. நெல்மிஷின் ஓடாதேயென ஏங்குகின்றனர் சிலர். மில்கள் ஓடாமல் முதலாளி நஷ்டமடைகிறார். கூலியாட்கள் வயிற்றைத் தடவுகின்றனர். நம் நாட்டிலேயே இப்படியென்றால் சமையல் முதல் சலவைவரைக்கும், மாடி ஏறுவதற்கும், தண்டனை பெற்றோரை மடிய வைப்பதற்குமாக இத்தியாதி காரியங்களுக்குப் பிரதானமாக மின்சாரம் பயன்படுத்தப்பெறும் மேல்நாடுகளில் சில நிமிடம் மின்சாரம் தடைப்பட்டாலும் அதனால் நேரும் சங்கடங்கள் வர்ணிக்க முடியாது. இந்த அரிய மின்சாரத்தை அடிமைகொண்டு அதை எந்தெந்த விதங்களில் சேர்த்து வைத்து எப்படி எப்படிப் பயன்படுத்துவது என்ற விதிகளை உலகுக்களித்தவர்தான் **தாமஸ் ஆல்வா எடிசன்.**

இவர் ஒஹியோமாகாணத்தில் மிலானில் ஒரு தானிய வியாபாரியின் மகன். தன் தாயிடத்தே ஆரம்பக்கல்வி பயின்ற எடிசன் கணிதப் பாடம் தனக்குப் பிடிக்காமல் ரசாயனத்தில் (Chemistry) ஆர்வமிகுந்து காணப்பட்டார். பள்ளி வாழ்வு அவரைக் கவரவில்லை. தானே ரசாயன ஆராய்ச்சி நடத்த விரும்பி இளவயதிலேயே தன் வீட்டின் சிறு அறையொன்றில் ரசாயனகூடம் அமைத்தார். இதில் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். தன் கூட்டாளிகளாக அநேக பையன்களையும் துணைக்குச்சேர்த்துக்கொண்டார். இதனால் தன் குடும்பத்தில் ஏற்படும் அதிக செலவைச் சரிக்கட்ட தன் ஒப்வு நேரங்களில் ரயில் நிலையங்களில் பத்திரிகை விற்றும், இன்னுமிப்படி சிறுவேலைகள் செய்தும் அதில் வரும் கூலியைத் தன் தாயிடம் கொடுத்துவந்தார். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் எடிசன் தந்தியந்திர விவரத்தை நன்கு தெரிந்துகொண்டார். இதன் பயனாக அவருக்கு ஒரு ரயில்நிலையத்தில் தந்தி இலாகாவில் இரவு வேலையாளாக வேலை கிடைத்தது.

இந்த வேலை இவருக்குப் பெரிதும் பயன்பட்டது. இரவில் வேலைக்குப் போய்விட்டு பகலில் ஆராய்ச்சிகள் செய்து வந்தார்.

இந்நேரம்தான் இவர் தன் முதல் யந்திரத்தைக் கண்டுபிடித்தார். இரவில் தான் விழித்துக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக அவர் ஒவ்வொருமணிக்கும் ரயில் புறப்படச் செய்யும் ஆபிசிற்கு 'ஆறு' (Six) என்ற வார்த்தையை தந்திமூலம் அனுப்பிக் கொண்டிருக்கவேண்டும். எடிசன் ஒருசக்கரத்துடன் கடியார யந்திரசாதனமொன்றைப் பொருத்தி, ஒவ்வொரு மணிக்கும் தான் தூங்கிவிட்டாலும்கூட தானாகவே 'ஆறு' (Six) எனும் செய்தியை தந்திமூலம் அனுப்பும்படி ஏற்பாடுசெய்துவிட்டார். பின்னர் யதேச்சையாக நடந்த ரயில் விபத்து சம்பவத்தையொட்டி இவர் தன் வேலையினின்றும் நீங்கிக்கொண்டு உடனே அநேக மாகாணங்களில் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார். ஆங்காங்கே தந்தி யந்திர விவரமாய் தனக்கிருக்கும் திட்சண்யத்தை நிரூபித்துக் காட்டினார் தனக்கும் நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டார். பாஸ்டன் நகரில் ஒரு செய்திஸ்தாபனத்தில் தந்தி இலாக்காவில் நல்ல வேலையேற்றுக்கொண்டு அங்கிருந்தபடியே தம் ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்திவந்தார்.

எடிசனின் அரசாங்க உரிமை பெற்ற முதல் கருவி வாக்குக் கருவி (Vote Recorder) ஆகும். மின்சார நுணுக்கக் கருவிகளின் உதவியால் எவ்விதக் கோளாறுமின்றி இதில்வாக்குகள் (Votes) கணிக்கப்பெறும். எடிசன் இந்த யந்திரத்தை எடுத்துக்கொண்டு போய் தலைநகரான வாஷிங்டனில் மேல் அதிகாரிகளிடம் தத்ரூபமாக, நேர்மையாக இயந்திரம் இயங்குவதைக் காட்டினார். எல்லோரும் யந்திரத்தின் சக்தியையும், எடிசனின் அறிவையும் வியந்தனர். அதில் கள்ள ஓட்டுகள் பதிய முடியாதென்பதை எடிசன்விளக்கியும் அக்காலத்து அரசியலார் விரும்பவில்லையென்பதைக் கண்ட எடிசன் ஆச்சரியமுற்றார். ஏன், இக்காலத்திலுமப்படித்தானே நம் நாட்டில்!

ஒரு பிரபல தந்திக் கம்பெனியில் நுணுக்கமான யந்திரங்கள் சில கண்டுபிடித்துக் கொடுத்ததற்காக எடிசனுக்குநாற்பதினாயிரம் டாலர் வெகுமதி கிடைத்தது. அதை வைத்து பெரிய கட்டிடத்தை வாங்கி பிரபலரசாயனகூடமொன்றமைத்தார். இங்குநடத்திய ஆராய்ச்சியின் பயனாய் இருபது அரசாங்க உரிமைகளை பெற்றார். இதனால் எடிசனின்பேரும் புகழும் எங்கும்பரவி அவருக்கு ஏராளமாக பணமும் சேர்ந்தது. டைப் அடிக்கும் யந்திரம் (Type writer) கண்டு பிடிக்க பிரபல விஞ்ஞானி ஒருவரை வருவித்து

உதவிபுரிந்ததுடன் தானும் புது வித யந்திரம் கண்டுபிடித்து அதற்கும் அரசாங்கஉரிமை பெற்ருர். இதன்பின்னர் 'மென்லோ பார்க்' (Menlo Park) எனும் இடத்தில் பிரம்மாண்டமான தொழிற்சாலையொன்றையும் ஆராய்ச்சிக்கூடத்தையும் நிறுவினர். இங்குதான் எடிசன் தன் ஆராய்ச்சியை ஸ்திரப்படுத்தி தந்தி, டெலிபோன், மின்சார விளக்கு, டைனமோ, மோட்டார், டிக்டபோன் முதலிய யந்திரங்களைப்பற்றி ஆராய்ந்து உலகுக்கே சிறந்த சாதனங்களாகிய அவைகளை மக்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்கினர்.

அவரையும் அவர்தம் சாதனைகளையும் பார்ப்பதற்கும், பாராட்டுவதற்கும் திரள்திரளாக மக்கள் சென்றனர். அவரை மென்லோ பார்க்கின் மந்திரவாதி (Wizard of Menlo Park) என அழைத்தனர். அந்தக்காலத்தில் மின்சார விளக்குகள் சரியாகச் செய்யப்படவில்லை. நடைமுறைக்கு வரவுமில்லை. எடிசன் மின்சார விளக்கை பரவச் செய்வதற்காக பத்து ஆண்டுகள் தீவிர சோதனை செய்தார். நாம் பல்பிற்குள் பார்க்கிருேமல்லவா ஒரு கம்பிச் சுருள், அதுஎன்னபொருளினல் ஆக்கப்பட்டால் விளக்கு அதிக நேரம் இளகிவிடாமல் எரியும் என்பதே அவர் சோதனையின் குறிக்கோள். முதலில் குரோமியமெனும் உலோகத்தைப் போட்டு பரிசோதித்தார். பயன்படவில்லை. பின்னர் கரிப்பொருளைப் போட முடிவு செய்தார். இதன்பேரில் கைக்குக் கிடைத்த பொருளையெல்லாம் கரியாக்கிப் பரிசோதித்தார். இறுதியில் கரித்தாள்சுருள் இவருக்கு பயன்பட்டது. அதைப் பொருத்திய விளக்கு சோதனைச் சாலையில் நாற்பது மணி நேரம் எரிந்தது. அதுவரை செய்ததில் இதுதான் அதிகதிருப்தியளித்தது. ஆகவே எடிசன் விளக்கொளியை யாவரும் காண விளக்கு விழா நடத்தினர். அதில் முதல் முதலாக மென்லோ பார்க்கின் தெருக்களிலும் பூங்காவிலும் வீடுகளிலும் மின்சாரவிளக்குகள் பொருத்தப்பட்டு எரிந்தன. இதனைக்காண அநேக இடங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்தனர். இதனுல் எடிசனின் புகழ் உலகப் பிரசித்தமானது. அமெரிக்கர் மனதில் அவர் பெரும் மதிப்புப் பெற்றுவிட்டார்.

1878ம் ஆண்டில் மின்சார விளக்கு உரிமையை அரசாங்கத்திடம் பெற்ருர். இதைத் தொடர்ந்து இது சம்பந்தமாய் இன்னும் 375 உரிமைகள் பெற்ருர். அரசாங்கஉரிமையென்பது இவர் பதிவுசெய்துகொள்ளும் முறைப்படி வேறு எவரும் அந்தச் சாமான் செய்யக் கூடாதெனும் விதியாகும். எடிசனுக்கு கரித்தாள்சுருள் முறையில் அதிருப்தி ஏற்பட்டு வேறு பொருளாலான

சுருளுக்கு சோதனை நடத்தினர். புதுப் பொருளுக்காக ஏராள செலவில் ஆப்ரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களுக்கும் ஆட்கள் அனுப்பினர். ஆயிரத்திற்கும் அதிகமான பொருள்கள் இவர் சோதனைக் கூடத்திற்கு வந்துசேர்ந்தன. அவை யாவும் சோதனையிடப்பட்டன. கடைசியாக ஒருவித மூங்கில் திருப்தியளித்தது. அதையே பொருத்தி விளக்குகள் செய்தனர். அதுவே அடுத்த ஒன்பதாண்டுகள் வரை பயன்பட்டது. பின்னர் இதுவரை டங்ஸ்டன் அந்தஸ்தானம் வகித்து வருகிறது. மின்சார விளக்கு கண்டுபிடித்ததும் எடிசன் மின்சாரத்தை சரியாக பயன்படுத்தும் வேலையில் கவனம் செலுத்தினர். ஏராளமானமின்சாரம உற்பத்திசெய்ய உதவும் டைனமோக்கள் செய்வது; நாடு முழுவதும் மின்சாரத்தை எடுத்துச்செல்லும் சாதனை; ஒரே அளவான மின்சாரம் எங்கும் நிலைக்கும்படி பார்ப்பது; சகாயமான அதிகநாள் எரியக் கூடிய பல்புகள், சுவிட்சுகள் (switches), ஹோல்டர்கள் (holders), ப்யூசுகள் (fuse) முதலியன.

அக்காலத்தில்டைனமோக்கள் சரியாகஇயக்கப்படாமலிருந்தன. அவைகள் செய்யும் முறையில் சிலமாறுதல்கள் செய்து இரும்புச்சத்தை அதிகமாக்கி நிறைய மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடியதாய் எடிசன் சீர்திருத்தினர். 1881ம் ஆண்டில் உலகம் வியக்கத்தக்க பெரிய டைனமோ செய்து பாரிஸ் பொருட்காட்சியில் வைத்து தன் புகழை இன்னும் பரவச் செய்தார். அதையடுத்து ஒரு பெரிய மின்சாரம் இயக்கும் நிலையமொன்றை நியூயார்க்நகரத்தில் ஏறபடுத்தி ஒரு சதுர மைல் அளவுக்கு தேவையான மின்சாரம் தயாரித்தார். அக்காலத்தில் நகரில் விளக்குகளுக்கு கரிவாயு பயன்பட்டு வந்தது. மின்சாரம் வந்ததும் கரிவாயுதயாரிக்கும் கம்பெனிகளிடமிருந்து மிகுந்தஎதிர்ப்புவந்தது. ஆனல் உலகப்புகழும் அமெரிக்கரிடம் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் பெற்ற எடிசன் இந்த எதிர்ப்பை இலகுவாக தன் புகழாலும் பணத்தாலும் முறியடித்து மின்சாரத்திற்கு நிரந்தர இடமளித்தார்.

1887ம் ஆண்டில் சலனப் படத் தயாரிப்பில் எடிசன் ஆர்வம் காட்டினர். தொடர்வாக உள்ள சம்பவங்களைக் கொண்ட படங்களைப் போட்டோ எடுத்து அதை உருளைமீதுபோட்டுசுழற்றிப் பார்த்தார். இப்படியாக சலனப் படம் தயார்செய்தார். அக்காலத்தில் படத்தைத் திரையில் காட்டுவது கிடையாது. பிலிம்கள் உருளைமீது பொருத்தப்பட்டு கையால்சுழற்றப்படும். ஒரு பெட்டிக்குள் தெரியும் அந்தபிம்பங்களை நாம்கண்ணாடி

மூலம் காணலாம். முதன் முதலாக சலனப்பட நிலையம் (Motion Picture Studio) எடிசனால் நிறுவப்பட்டது. அதில் நீச்சல்போட்டி, குஸ்திப் போட்டி, நடனங்கள், விளையாட்டுகள் ஆகியவை சுடப்பட்டு படமாகக் காட்டப்பட்டன. இத்துடன் நிற்கவில்லை. நாம் பேசுவதை யந்திரத்தில் பதிவுசெய்து பின்னால் மறுபடி கேட்கும்படியான சாதனத்தைக்(Dictaphone) கண்டுபிடித்தார். மின்சார ரயில் செய்வதிலும் அநேக புதியகருவிகள் செய்தார். போர் நடந்துகொண்டிருக்கையில் எடிசன் அரசாங்கத்திற்காக எத்தனையோ போர்க்கருவிகள் கண்டு பிடித்துச் செய்து கொடுத்துக் கௌரவிக்கப்பட்டார்.

இப்படியாக எடிசன் வாழ்நாள முழுவதும் 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது உண்மையாக்கப்பட்டிருக்கிறது. அவர் ஆரம்பித்த எந்த சாதனையிலும் அவர் தோல்வி கண்டதில்லை. 1400க்கு அதிகமான அரசாங்க உரிமைகள் அவர்பெற்றிருந்தார். தந்தியிலிருந்து மின்சாரவிளக்குவரை, சினிமாமுதல் டைப் யந்திரம் வரை எத்தனையோ மக்களுக்கு மிகவும் பயன்படத்தக்கதாகவும், அவசியமானதாகவும் உருவாக்கினார். அமெரிக்காவுக்குமட்டுமல்ல, எடிசன், உலகிலே இதுவரை வாழ்ந்த தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராவார். அவர் 1931ம் ஆண்டில் அக்டோபர் 18ம் நாள் தன் சொந்த ஊரில் இயற்கை எய்தினார். அன்னார் நினைவிற்காக அநேக ஊர்களில் இரவு 10 மணிக்கு இரண்டு நிமிடங்கள் விளக்குகள் அணைக்கப்பட்டன.

நம்நாட்டிலும் இத்தகைய மேதையொருவர் கோவையில் இருக்கிறார். சவ்விக்கொரு அருமையான பேனா மாத்திரமல்ல, தொடர்ந்து இரண்டாண்டுகள் பயன்படுத்தக்கூடிய சவரக்கத்தி மாத்திரமல்ல, கைமுஷ்டிக்குள் அடங்கும் மின்சார மோட்டார் மாத்திரமல்ல, நூறுரூபாய்க்குள் ஒரு ரேடியோ செட்மாத்திரமல்ல, நவீன வாக்கு கணிக்கும் யந்திரமாத்திரமல்ல, $10\frac{1}{2}'$ உயர பருத்திச் செடியும், $16\frac{1}{2}'$ தானியச் செடியும் உற்பத்திசெய்வது மாத்திரமல்ல இன்னோரன்ன எத்தனையோ நம்பமுடியாத சாதனைகளை நம் விஞ்ஞான மேதை **ஜி. டி. நாயுடு** கண்டுபிடித்து உலகுக்குக் காட்டியிருக்கிறார். ஆனால் அவர் சும்மாதான் தற்சமயம் இருக்கிறார். அவரை ஆதரித்து அவர்தம் அறிவை நாட்டினிற்குப் பயன்படுத்தாமல் சும்மாயிருக்கும் நாம், ஆம், அரசாங்கமென்றாலும் நாமென்று தானே சொல்லிக்கொள்கிறோம், என்ன பிராயச்சித்தம் செய்யப் போகிறோமோ தெரியவில்லை.

★

நேயர் தபால்

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். மகிழ்ச்சி பிறந்து வளர்ந்து நகர்ந்து தவழ்ந்து இப்பொழுது நான்கு வயதுக் குழந்தையாகி, நகரெல்லாம் சுற்றிவருவதுகண்டு சந்தோஷமடைகிறேன்.

தமிழ்நாட்டில், தமிழ் மரபில், தமிழின் தந்தையாக உதித்த திருவள்ளுவரின்குறளை, இதற்கு முன் தோன்றிய எப்பத்திரிகையிலும் இதுவரையிலும்பதிப்பிக்காத குறளை, ஆண்டிமுதல் அரசன்வரை அறியும் பொருட்டு பதித்துவந்த குறள் ஆனி மாத இதழுடன் முடிவடைந்ததுபற்றி எனக்கு மகிழ்ச்சி. ஆடிமாத இதழில் பொன் மொழிகள் போன்ற வாக்கியங்களை பதிப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு வாக்கியமும் பதிப்பிக்காததைக் கண்டு ஏமாற்றம் அடைந்தேன். இனிவரும் இதழில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நாலடியார், களவெண்பா போன்ற பாக்களை பதிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னுரையோடு நன்னுரையாக செந்தமிழ் செழித்தோங்க நாடுமுழுவதும் சுற்றித் தவழும் மகிழ்ச்சி வாழ்க! என்றும் இன்றும் எப்பொழுதும் குன்றாமல் மகிழ்ச்சி வாழ்க! மானிடவர்க்கத்துக்கு மனித உணர்ச்சியை ஊட்டும் மகிழ்ச்சி வாழ்க! திங்கள் ஒருமுறை நிகழும் செந்தமிழ் மகிழ்ச்சி வாழ்க! வாழ்க!

கா. ராமர், முத்துலிங்காபுரம்.
19—7—52.

[ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் முடியும் அறிஞர்களின் பொன்மொழிகளை அன்பர்கள் தொகுத்து அனுப்பினால் அவசியம் பதிப்பிக்கிறோம்.]

* * * *

திரு. ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் பல. ஐயா, சீர்திருத்தம், புதுமை, கலை என்ற பெயரால் அழிந்துகொண்டிருக்கும் சமுதாயத்தை அழிக் கிடங்கில் அமுக்குகின்றன இன்றைய சில, ஏன் பல ஏடுகள்.

பல மேடைப் பிரசங்கிகளும், அரசியல் தலைவர்களும் — ஏன் பத்திரிகை ஆசிரியர்களும்கூட தம் பெயருடன் சாதிப்பெயரை சேர்த்துக்கொள்ள மறப்பதில்லை.

இத்தகையசூழ்நிலையிலே சாதி சமயமென்னும் நச்சு மரத்தைத் தூரோடு சாய்க்கும் அறிவுக் கோடாரியாய், மதம் என்னும் விரியன் பாம்பின் உயிரைக்குடிக்கும் கட்டாரியாய், புதுமை நிலவாய், ஞானப்பரிதியாய், அரசியல் பித்தலாட்டங்களை அம்பலத்துக்கிழுத்து தன் கடமையினின்

றம் வழுவாது பணியாற்றிவரும் ஒரே இதழ் மகிழ்ச்சி. இது பற்றி மகிழ்ச்சி. எக்கட்சிக்கும் விளம்பர ஏடல்ல மகிழ்ச்சி என்னும்போது இன்னும் மகிழ்ச்சி.

மகிழ்ச்சி பொங்கும் மலர் முகத்தோடுகூடிய பாலகர்களை அட்டைப்படமாகக் கொண்டு வரும் மகிழ்ச்சியை வரவேற்காதோர் உண்மையில் இல்லை. ஆகா! மகிழ்ச்சிபொங்கும் சிறுவர்கள்! மறக்க முடியாத காட்சி. நான் அவ்விதழ்களை அடுக்கி வைத்திருக்கிறேன் என் அறையில் அழகாக!

ஆனால் இன்று சீர்திருத்த இதழாகிய மகிழ்ச்சி சினிமாச் சிங்காரிகளை அட்டைப்படமாகத் தாங்கி வருவது என்போன்றோருக்கு வருத்தம் தருவதோடுகூட அதன் தரத்தையும் குறைத்து விடுகிறது. இது தற்காலிகமானதென்று நினைத்தேன். ஆனால் என் எண்ணத்தில் மண்.

திரையழகிகளைத் தாங்கிவாரத் தனியாக இருக்கின்றன சில பேசும்படச் செய்தித் தாள்கள். நான் இதை பலரின் அபிப்பிராயப்படி எழுதுகின்றேன். இப்போது கையாளும் கொள்கை கைவிடப்படவேண்டியதே நான் ஓர் மகிழ்ச்சி தாசன் என்ற ரீதியில் சொல்கிறேன். என் வேண்டுகோளை ஏற்காவிடில் எனக்குச் சமாதானம் தேவை. தங்கள் கொள்கைக்குக் காரணம் அவசியம் தேவை. எதிர்பார்க்கிறேன் ஆவலாக! வணக்கம்.

பே. பாலையா. புதூர்.
கோவில்பட்டி.

[பழமையில் மூழ்கி, புதுமையைக் கண்டு புழுங்கி வெருண்டு நிற்கும்மக்களை சீர்திருத்தமென்ற கசப்பு மருந்து மாத்திரையை உட்கொள்ளச்செய்யவேண்டுமானால், கவர்ச்சிகரமான அட்டைப் படம் என்ற இனிப்பை மேலாகக் காட்டித்தான் ஆகவேண்டியதிருக்கிறது. குழந்தைகளின் படங்களை மேலாகக் கண்டோர், சிறுவர் பத்திரிகை என்று சென்றுவிடுவதாகவும் நம் ஏஜண்டு தோழர்கள் பலமுறை அறிவித்ததும் ஒரு காரணம். எனவே, நேயர்கள் மேற்கண்ட பதிலில் திருப்தியடைவதுடன், கருத்தும் கவர்ச்சியும் கொண்டு வெளிவரும் 'மகிழ்ச்சி'யை முன்னிலும் ஆர்வத்துடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். அதே தேதியில் வந்த மற்றொரு நேயரின் தபாலையும் கவனிக்கவேண்டுகிறோம்.]

* * * *

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் பல. 'ஒவ்வொரு மாதமும் எப்பொழுது முடியும், மறுமாதம் 1ந் தேதி என்று வரும்' என்று எதிர்பார்த்து அந்த 1ந் தேதியன்று மகிழ்ச்சியோடு சென்று நம் மகிழ்ச்சிப் பத்திரிகையை வாங்கி அட்டைப் படத்தைப் பார்த்தவுடன் இருமடங்கு மகிழ்ச்சியும், புரட்டிப் பார்த்து விட்டால் இன்னும் பலமடங்கு அதிகமான மகிழ்ச்சியும் அடைகிறேன். இதெல்லாம் நான்

இந்தப் பத்திரிகையைப் படித்து அடைந்த பகுத்தறிவும், மன மாற்றமுமே காரணம் என்று கருதுகிறேன். ஆனால்...

ஆனால் என்ற வார்த்தைக்கே அர்த்தம் பல உண்டு. ஆனால் இந்த ஆனாலுக்குள்ள அர்த்தம் வேறொன்றும் பிரமாதமில்லை. தாங்கள் இந்த சினிமா ஞாபக சோதனைப் போட்டி ஆரம்பித்த நாலு மாதங்களில் மூன்று மாதமாக நம் மகிழ்ச்சி எங்கள் ஊரைப்பொருத்தமட்டிலும் ஒன்றுக்கு இரண்டு மடங்காக வந்தாலும் விற்பனையாகும். இந்த மூன்று மாதமாக 1௨ விட்டால் 2௨ ஊரெங்கும் சுற்றினாலும் ஒரு பிரதி கிடைப்பது அரிதாகிவிடுகிறது. ஆகையால் அடுத்தமாதம் முதல் அதிகப்பிரதிகள் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று மிக தாழ்ந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ. டி. லிங்கன், மதுரை.
23—7—52.

தாலி பாக்கியம்

பெ. கு. சாமிநாதன்
பெருமாங்குடி.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந்தாங்
கலந்தனவே"

என்று செம்புலப்பெயனீரார் அன்று சொன்னார். களவுவழிக் காதல் வாழ்வு நடத்தினர் அக்கால மக்கள்; அதனைக் களங்கமென்று கருதாத காரணத்தால், 'களவும் கற்றுமற' என்ற பழமொழி பண் இசைத்தது. ஆனால் இன்று, அம்முறையை முரண்பட்டதாகச் சமூகம் கருதுகின்றது. உள்ளமொருமித்த காதலர்களின் வாழ்க்கைப் படகைக் கண்டு சாதிச்சுறா சாடிக் கவிழ்க்கின்றது; மதச்சுழல் அதனை மாய்த்துவிடுகின்றது அதுமட்டுமா? இணைந்த இதயத்தினரைக் கண்டு வைதீகநச்சரவம் சினந்து சீறுகிறது—சாத்திர ஓநாய் ஆத்திரப்படுகிறது. ஆகவே, செம்புலப்பெயனீரார் சித்தரித்துக் காட்டிய அந்த முறை புதைந்து மண்மூடிவிட்டது என்று எண்ணியிருந்தேன். ஆனால் என்னுடைய எண்ணம் தவறு என்பதை அவள் நிரூபித்துவிட்டாள்.

* * * *

அன்று அலுவலகத்திற்கு அவசரமாகச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் அருகில் உள்ள 'பஸ் ஸ்டாண்டிற்கு' விரைந்து சென்றேன். 'பஸ்'ஸின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கையில் என் பின்புறம் வளையல் குலுங்கும் சப்தம் கேட்டு திரும்பினேன். பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் அணைந்திருந்த புத்தகச் சுமை அவளை ஒரு மாணவி என்று விளம்பரப்படுத்தியது. அவளும் பஸ்ஸுக்காகவே காத்திருந்தாள். அப்போது அவளைப்பற்றி நான் ஒன்றும் நினைக்கவில்லை—அப்படி நினைத்திருந்தாலும் ஏதோ ஆடம்பரத்திற்கு அடிமைப்படாதவள், நம் நாட்டில் படிக்க வசதியுள்ள பெண்களுள் இவளும் ஒருவள் என்ற அளவே நினைத்திருக்க முடியும். காரணம் என் நினைவெல்லாம் 'பஸ்ஸின்' மீதே இருந்தது.

'பஸ்' ஸும் வந்துவிட்டது. நல்லகாலமாக எங்கள் இருவருக்கும் பஸ்ஸில் இடம்கிடைத்தது. அவள் 'டிக்கெட்' கேட்டதிலிருந்து அவள் இறங்கவேண்டியஇடத்திற்குமுன்னாலேயேநான் இறங்க

வேண்டியவன் என்று தெரிந்து கொண்டேன். இறங்கவேண்டிய இடமும் வந்தது—நான் அவசரமாக இறங்கி அலுவலகமும் சேர்ந்தேன். அங்கு சென்ற பிறகுதான், கையில் கொண்டு வந்த புத்தகத்தை வண்டியிலேயேவைத்து மறந்தது நினைவிற்கு வந்தது. அன்று முழுவதும் எனக்கு வேலையே ஓடவில்லை.

“அந்தப் புத்தகத்தை அப்பெண் எடுத்திருப்பாளோ! இது என்ன பைத்தியக்கார எண்ணம்! எதற்கும் நாளை அதே பஸ்ஸுக்குச் சென்று ‘கண்டக்டரிடம்’ கேட்டால் ஒருவேளைக் கிடைக்கலாம்” என்று என்னையே தேற்றிக்கொண்டேன்.

மறுநாள் காலைக்கடன்களை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு வண்டி நிற்கும் இடத்திற்கு விரைந்து சென்றேன். வண்டியின் வருகையைவிட அவ்வனிதையின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு நின்றேன். அவளும் சிறிது நேரத்திற்கெல்லாம் வந்துவிட்டாள். அவளை எப்படிக் கேட்பது? ஏதாவது வித்தியாசமாக நினைத்துக்கொண்டால்...இப்படி யோசித்துக்கொண்டு இருக்கும் போதே “நண்பரே! பாக்கியம் என்பது உங்கள் பெயரா?” என அப்பெண் கேட்டது எனக்கு வியப்பை அளித்தபோதிலும் போன பொருள் இவளிடம் இருக்குமோ என்ற ஐயப்பாடுடன் ‘ஆம்’என்றேன். உடனே ஒரு புத்தகத்தை வெளியேஎடுத்து ‘இது உங்களுடையதா?’ என்றாள். விழியிழந்தவன் ஒளிபெற்றதுபோல எனக்கு இருந்தது. என் நன்றியை மனப்பூர்வமாக அவளுக்குச் செலுத்திக்கொண்டேன்.

அன்றுமுதல் நான் ‘பஸ்’ஸிலேயே செல்ல ஆரம்பித்தேன். அம்மங்கையைத் தினமும் சந்திக்க வாய்ப்பும் கிடைத்தது. ஆனால், அவள்பெயரோ, வீடோ, எந்தப் பள்ளியில் படிக்கிறாள் என்பதையோ நான் அறிந்து கொள்ள சந்தர்ப்பமே ஏற்படவில்லை. வாய்ப்பை எதிர்பார்த்த நான் ஏமாந்தேன் என்றுதான் சொல்லவேண்டும். காரணம் தொடர்ந்தாப்போல் அவள் அங்கு வருவதில்லை. எங்களிடையே எவ்வித தொடர்பும் இதுவரை ஏற்படாவிட்டாலும் அவள் வராமலிருந்தது எனக்கு வருத்தம் மட்டுமல்ல வாட்டத்தையும், நிம்மதியின்மையையும் தந்தது. இப்படியாக நாட்கள் பல நகர்ந்து கொண்டிருந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் மாலைவேளையைக் கழிக்க வேண்டி புறப்பட்டேன். எங்கு போவது என்று ஒரு முடிவில்லாமல், மக்கள் நடமாட்டமில்லாத தனிமையான இடத்தில் சற்று உலவிவரலாம் என்று எண்ணிக்கொண்டேவெகுதூரம் நடந்துவிட்டேன். பக்கத்தில்

தாவது ஒருநாள் வீட்டில் தங்கப்போகிறாரே!' என்று அவள் ஆறுதலோடுகூடிய ஒருசந்தோஷம்கொண்டாள். இருந்தாலும் அவள் மனதின் ஒருமூலையில் ஒரு சின்ன சந்தேகம். 'ஏதோ இப்போ இப்படிச்சொல்லுகிறார். விடியும்வரையிலும் இந்நினைப்பு இருக்குமா? இராத்திரியில் ஏதாவது நினைத்துக்கொண்டு...... நாளை முழுவதும் கழிந்தால்தான் நிச்சயம்'

ஆத்மசாந்தியில் கோமளம்

இந்த விஷயத்தில் கணவனிடம் அத்தனை நம்பிக்கை அவளுக்கு! 'அவர் சதா ஆபீஸ், ஆபீஸ் என்று ஆபீஸ் கவலையே அதிகம் உள்ளவர்; ஆபீஸ் வேலை செய்யவே அவர் மனம் துடித்துக்கொண்டிருக்கும்' என்கிற உண்மையை, இத்தனை நாள் அவரோடு வாழ்க்கை நடத்தும் கமலா புரிந்துகொண்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இரவு கழிந்து பொழுதும் விடிந்தது. படுக்கைவிட்டு எழுந்தவுடன் ஏதாவது அவர் சொல்லுவாரோ என்று எதிர்பார்த்தாள் கமலா. ஆனால் நல்லவேளையாய் அவர் ஒன்றும் சொல்லவில்லை. சரிதான், உண்மையாகவே அவர் அன்று வீட்டில்தான் இருக்கப்போகிறார்; ஆபீஸ் செல்லமாட்டார். இது நிச்சயமாகிவிட்டது கமலாவுக்கு.

அன்று அவர் ஆபீஸ் போகவில்லை. சாப்பிட்டுவிட்டு ஈஸிச்சேரில்வந்துசாய்ந்துகொண்டார்.

கொஞ்சநேரத்தில் கமலாவும் முன்ஹாலுக்குவந்துசேர்ந்தாள். அவருக்குப் பக்கத்தில் இருந்த விசுப்பலகையில் உட்கார்ந்து, ஈஸிசேரின் கைப் பலகையில் அவர் வைத்திருந்த வெற்றிலைத் தாம்பாளத்திலிருந்து வெற்றிலையை எடுத்தாள், தான் போட்டுக்கொள்ள.

“இத்தனை சீக்கிரம் சாப்பிட்டுவிட்டாயா?” என்றார் அவர்.

"பின்னே எவ்வளவு நேரம் ஆகும்?"

"பெண்கள் எல்லாம் நிறையச் சாப்பிடுவார்கள் என்று சாஸ்திரம் சொல்கிறது. இவ்வளவு சீக்கிரத்தில் நீ சாப்பாட்டை முடித்துக்கொண்டுவிட்டாயே! ஒருசமயம் நீ சரியாகவே சாப்பிடுவதில்லையோ?"

"ஆமாம் போங்கோன்னு! நான் நன்றாய்த்தான் சாப்பிடுகிறேன். ஆனால் எனக்குச் சாப்பிட அதிகநேரம் தேவையில்லை"

உள்ளேயிருந்து குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது.

"இரு இரு; குழந்தைவிழித்துக்கொண்டாள்போல் இருக்கிறது; கத்துகிறாளே" இதுநடேசர்

"ஆமாம்; இதோ வந்துவிட்டேன்" என்று கமலா எழுந்து உள்ளே போனாள்.

கூடத்தில் தூளியில் தூங்கி விழித்திருந்த குழந்தையை எடுத்துக்கொண்டுவந்து, பழைய படி கணவன் முன்னால் விசுப் பலகையில் உட்கார்ந்துகொண்டாள். குழந்தையோடு வந்து உட்கார்ந்தவளை அவர்பார்த்தார். ஆனால் ஒரு வார்த்தை பேசவில்லை. குழந்தையை வாங்கி வைத்துக்கொள்ளும் நினைப்பு துளிகூட அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அவர் ஏதோ யோசனையில் மூழ்கிவிட்டிருந்தார். இதை அவருடைய சிந்தனை ரேகை ஓடும் முகமே காட்டிவிட்டது கமலாவுக்கு.

கொஞ்சம் தாழ்ந்த "என்ன யோசனை உங்களுக்கு?" என்று கேட்டாள். அவளுக்குப் பயம், ஏதாவது ஆபீஸ் நினைப்பு வந்துவிட்டதோஎன்று. திடீரென்று கிளம்பி ஆபீஸுக்குப் போய் விடுவாரோ என்கிற சந்தேகம்.

"ஒன்றும் இல்லை" என்று பதில் சொன்னவர், அந்தச் சிந்தனைக் காட்டிலிருந்து மனதைத் திருப்பி மனைவியிடமும் குழந்தையிடமும் கவனம் செலுத்த முற்பட்டார்.

"என்ன, நம்மருக்கு ரொம்ப சமத்து! பாருங்களேன், இவ்வளவு நேரம் தூங்கிவிட்டு இப்ப விழித்துக்கொண்டிருப்பதை"

"நீ சமத்து; அதைப்போல உன்னுடைய குழந்தையும்..."

"ஆமாம் போங்கோ!"

"பின்னே நீ சமத்தில்லையா?"

"நான் சமத்தோ இல்லையோ, உங்கள்பெண் மகாசமத்துதான்"

அவர் மௌனமாக இன்பத்தைப் பருகிக்கொண்டிருந்தார்.

"நம்ம ருக்கு சமத்துமட்டுமா? என்ன அழகு பாருங்கோ"

குழந்தை ருக்கு உண்மையில் அழகாகவே இருந்தாள். ஒரு வயது நிரம்பாத அதற்கு 'கரு கரு' என்று சுருண்டு சுருண்டு சின்ன தலையை அலங்கரிக்கும் கேசம். இரண்டு கண்களிலும் கவர்ச்சியோடுகூடிய சாந்தத்தின் ஒளி. ரோஜாப் பூப்போல் மென்மையான கன்னங்கள்! நன்றாய் அமைந்த நாசி. உருவ அழகு பொருந்திய இரண்டு காது. அதன் அழகை அதிகப் படுத்தும் தொங்கட்டான்கள். 'துரு துரு' என்று துடிக்கும்கை கால்கள். தங்க நிறம் போன்ற சிவப்பு உடம்பெல்லாம். அந்த குழந்தை அழகுதான்; சாதாரண அழகா? பார்ப்பவர் மனத்தைகர்க்கும் பேரழகு அது!

"இவளை முத்து என்று கூப்பிடக் கூடாதா? ரத்தினம் என்று கொஞ்சக்கூடாதா?" என்றவள் குழந்தையை முகத்தருகேதூக்கி அணைத்து, அதன் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

அந்தக் குழந்தையும் கைகால்களை ஆட்டிக்கொண்டு பொக்கை வாயைத் திறந்து ஒரு மோகனச் சிரிப்புச் சிரித்தது.

இதையெல்லாம் பார்த்து உள்ளுக்குள்ளே சந்தோஷப்பட்டுக் கொண்டார் நடேசன்.

மறுபடியும் அவள் ஆரம்பித்தாள்: "என்ன, நம்ம ருக்குவை ரத்தினம் என்றுசொன்னால் குற்றம் உண்டா? மாணிக்கம்என்று அழைத்தால் தவறு உண்டோ? என் மாணிக்கம்; மாணிக்கக் கட்டி!" அவள் குழந்தையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள்.

ஆத்மசாந்தியில் வஞ்சியூர் & குமாரி.

இதைக்கேட்ட நடேசருக்கு, இதைப் பார்த்த அவருக்கு நினைவு எங்கேயோ சென்றது. அவர் மனம் காலப் பாதையில் பதின்மூன்று, பதினான்கு வருஷங்கள் அவரைமுன்னே இழுத்துச்சென்று நிறுத்தியது குழந்தை ருக்கு தருணியாய் பருவ எழில் மேனியின் ஒவ்வொரு அங்கத்திலும் வழிந்து புரள, அழகுத் தெய்வம்போல் சுடர் விட்டு நிற்கிறாள். பெண்மைக்கு உரிய எல்லா லக்ஷணங்களும் பொருந்திப் பொலிவுடன் விளங்குகிறாள். கவலைக்கு மருந்து போல் உள்ள சங்கீதம்போன்ற கலைகளில் எல்லாம் தேர்ச்சி பெற்று, கலாதேவிபோல் காட்சி அளிக்கிறாள். அவளை வாழ்வுக் கோயிலில் ஓர் ஆண் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்யவேண்டியகாலம் அது அவர் தேடித் தேடிப் பார்க்கிறார்; கோயிலில் தெய்வத்தைக்காணோம்; ஏதோ ஒரு துஷ்ட தேவதை இருந்து கொண்டு 'உன்மகளை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இன்னும் என்ன தருவாய்?' என்று கேட்கிறது. 'எனக்குப்பெண்கொடுத்தால்மட்டும் போதாது. பொன்னும் வேண்டும்' என்று கர்ஜிக்கிறது. 'கொண்டு வா மூவாயிரத்தை, நாலாயிரத்தை' என்று கோர முழக்கம் செய்தது.

ருக்குமாணிக்கந்தான்; ஆனால் விலைபோகாத மாணிக்கம். பெற்றுக்கொள்ளுகிறவன் அதற்காகப் பணம் கொடுக்காது, அத்தோடு பணத்தைப் பெறும் ஒரு விசித்திர மாணிக்கம்!

இந்தச் சிந்தனைகள் நடேசர் முகத்தில் கவலை ரேகைகளை இட்டன!

புன்சிரிப்பு தவழ்ந்து விளையாடின முகத்தில் கவலை திடீரென்று படிவதைக் கண்ட கமலா "ருக்குவை இங்கேபாருங்களேன். அதற்குள் உங்களுக்கு ஆபீஸ் கவலை வந்துவிட்டதோ? என்தான் உங்களுக்கு ஆபீஸ் கவலையோ?'' என்றாள்.

பேதைப்பெண்! அவருடைய சிந்தனையை அவள் கண்டாளா? அவள் உள்ளம் எதிர்காலத்தில் பயணம்பண்ணாது, குழந்தையின் சௌந்தரியத்தில் ஈடுபட்டுக்கிடக்கிறது. கணவனின் கவலை அவளுக்கு எப்படிப் புரியும்.

இப்பொழுது சொல்லுங்கள்

— அ. பிச்சை-மதுரை —

கல்லின்மேல் கல் அடுக்கப் பட்டு கட்டடம் வளர்ந்துகொண்டிருந்தது. ஒரு செங்கலுக்கும் மற்றோர் செங்கலுக்குமிடையே சுண்ணும்புச் சாந்தை வைத்து கொத்தன் கட்டிக்கொண்டிருந்தான். மாளிகையும் முழு உருவம்பெறும் நிலையிலிருந்தது.

மாளிகையின் வளர்ச்சி சுந்தரத்தின் உள்ளத்திற்கு மகிழ்ச்சி பளித்தது. சுந்தரம்தான் உரிமையாளன். சுந்தரம் சுற்றிப் பார்த்தான். ஆட்கள் சரிவர வேலை பார்க்கின்றனரா என்ற சந்தேக எண்ணம்தான் அவனை அடிக்கடி பார்வையிடச் செய்தது. சுந்தரம் அப்படி வராவிட்டாலும் சோம்பேறிச்சுப்பன் வேலை ஒழுங்காகப்பார்ப்பதேது?

கண்காணிப்பின்போது அரைக் கண்களால் பார்ப்பவன் முழு விழிகளாலும் நோக்க ஆரம்பித்தான். மோகன உருவமொன்றை அவனைப் பார்க்க உள்ளம் உத்திரவிட்டது.

அவள்—அந்த அவள்தான்—அவளது உயிரா? உடலா? உயிருக்குப் பால் வேற்றுமை ஏது? உடல்—அந்த உடல்—கட்டழகு வாய்ந்த உடல்—உள்ளத்திலே ஆசையைக் கிளறும் உடல். அந்த உடல்கொண்டாளைத்தான் அவன் விழிகள் நோக்கியது.

சுண்ணும்புக் குழைவைச் சுமந்திருப்பதினால் இடை நெளிகிறது அரவைப்போல்; அவளது தோற்றம் காந்தம். சுந்தரம் இரும்பு. காந்தம் இரும்பினை ஈர்த்ததில் ஒன்றும் வியப்பில்லை.

'கண்ணொடு கண்ணினைக்கவ்வி, ஒன்றினை ஒன்று உண்ணவும், நிலைபெறாது, உணர்வும் ஒன்றிட அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினாள்' இந்நோக்கை 'காதல்' என்று சொல்வர் தமிழறிந்தோர். அந்த தூய சொல்லைச் சுந்தரத்தின் நோக்கிற்கு எப்படிச் சொல்வது?

காதலன்று—பின்? சுந்தரத்திற்கு காமம். அவளுக்கு காதலா? கடமையா? இரண்டுமல்ல. மற்ற ஒன்று. அவனுக்கு காமப் பசி. அவளுக்கு காசுப்பசி.

அப்படியானால் அவள்!

ஆம், அவள் 'அந்தப்பிழைப்பு தான் வாழ்விற்கு வழி' என்ற நிலைக்குள்ளாக்கப்பட்டவள்.

சாரத்தில் உள்ள கொத்தன் பார்த்தான் சுந்தரத்தை. அவன் இதழிலே ஒரு குறும்புச்சிரிப்பு. அவள் எத்தனையோ முதலாளிகளைச் சுழலவிட்டவள். அவள்

பெருங்காற்று. அவர்கள் துரும்பு.

* * * *

மாலை. கூலிபெற்றுக்கொண்டு சென்றனர். கொத்தன் அவளை ஏறஇறங்கப் பார்த்தான். அவள் கண்கள் 'நீதான் என்...ஆனால் புது விருந்தாளி—அவன் பணம் ....' என்றது.

சற்று அவன் முகத்திலே கடு கடுப்பு. சித்தாளுக்கு கொத்தன் தயவு இருந்தால்தான் பிழைப்பு!

பணம்—அலட்சியமாகப்பார்த் தாள். இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகள். புன்னகை ஒன்று இதழில்நெளிந்தது. சிரிப்பிலே சொக்கினான் சுந்தரம். அந்த இதழ் அவன் இதழுடன் ரகசி யம் பேசின.

நீர்வேட்கையுள்ளதாய் நீரைக் கண்டதும் ஆவலுடன்பருகுமே, அதுபோன்றதுடிப்பு அவனுக்கு. அவளுக்கு இருதய வேட்கை யாலல்ல, பணம்—அது தந்தவ ருக்கு எல்லாம் முகத்தை ஒன்ற உரிமையுண்டு—அவ்வளவுதான்.

'வீட்டுக்குப் போறேனுங்க' என்றாள் வலைவீசிடுவதில்தேர்ந்த அவள்.

அவ்வளவு எளிதில் அவனிடம் விடைபெற இயலும் என்று அவளும் கருதவில்லை—பின்? அதற்குப் பெயர் சாகசம்.

கையால் சாடைகாட்டி அறை ஒன்றினுள் நுழைந்தான். இவள் ஒன்றும் அறியாதவளல்லவே.

அவள் நாக்கு இதழைத் தட வியது—ஆசை, அந்த உடல் ஆசை—அதைக்கிளரியது அவன் தந்த உணவும் பணமும்.

உணர்ச்சியை விளக்கும் புன்சிரிப்பு—நுதலிலே குறு வியர்வை. கட்டில்—மட்டில்லாத இன்பம் அவனுக்கு. அவளுக்கும்கூட.

கற்பு? அது அவளிடம் என்றோ போக விடை பெற்றுக் கொண்டது. கற்பு என்ற சுடரை அணைத்த இருள் பெரிய மனிதராகத்தான் இருந்தனர்

* * * *

அவள் விரும்பியபணத்துடன் இன்பம். எத்தனையோபேரிடம் பெற்றதைக் காட்டிலும் வாலிபன் தந்த சுகம்......

நச்சுக்கோப்பை அவள்என்று அவன் அறிந்திருந்தால் இதழ் வைத்துப்பருகியிருக்கமாட்டான் அவனைப்பற்றி அவளுக்கு கவலையில்லை. தான் பெறவேண்டியது பணமும் இன்பமும். தன்னை கற்பழித்தக கலக்கும் கயவர்களுக்கு தருவதோ...? மருத்துவரின்ஆய்வுரையோடு மருந்துகள்.

ஒரு சிரிப்பு—அப்பாவி சுந்தரத்தை எண்ணி. வெற்றிச் சிரிப்பு—வெறிச் சிரிப்பு—பழி வாங்கும் அந்தச் சிரிப்பு அந்த பனைத்தோப்பில்எதிரொலித்தது.

பளிங்கு நீரோடை. காலைக் கதிரவனின் கதிர்கள்பட்டு மின்னும் தண்ணீர்த்துளிகள். வளைந்து வளைந்து செல்லும் நீரோட்டம். தண்ணீரைக் கண்டோர் தாகமில்லாவிட்டாலும் அதன் அழகிற்காக ஒருகை நீர். அது

போலத்தான் அவள். இளமை, கட்டழகு, ஆராத ஆசை இவைகளின் கூட்டுச் சரக்கு அவன்.

* * * *

காமாட்சி பரம ஏழை. மலேயாவுக்குச் சென்றுனே பிழைக்க —மாரி— அவன் மனைவிதான். மலேயா சென்றவன் உயிர் திரும்பி மீள்வதேது.

கணவன் அனுப்பிய பணம் நின்றது. கல்லுடைக்கப் போகலாம் என அழைத்தாள் ஒருத்தி. போவதைத்தவிர வழியில்லை.

கண்டிராக்டர் கந்தப்பனை அறியாதவர் கிடையாது. காமாட்சி வேலைக்கு அமர்த்திக்கொள்ளப் பட்டாள். கிட்டே நெருங்குவான், எட்டஎட்டப் போவாள் ஒருநாள், அவன் பலாத்காரத்திற்கு அவள் கற்பு பலி.

சிலநாட்கள் காமாட்சி கந்தப்பனின் ஆசைப்பொருள். மீனாட்சி என்ற ஒருத்தி வந்தாள் அது வரையும். கந்தப்பன் வாங்கும் கார்களும்—இந்தப் பேதைப் பெண்களும் சரி. புது மாடல் மோகம் அவனுக்கு.

அவள் ஒழுங்காகவாழ இயலவில்லை. தன்னை விலை கூறினாள் பின். சீரழிவின் சின்னம்சித்தாள்

* * * *

கந்தப்பன் மட்டுமா? முப்பிடாரி அம்மன் கோவில் பூசாரி. விபூதிப் பண்டாரம் அவன்.

கடவுளாவது கதி அருளாதா? என்று கருதித்தான் போனாள், நச்சுப் பாம்பு ஒன்றிருப்பதை அறியாது. அவன் அவளை வினவினான். விரதமிருக்கச் சொன்னான். கோவில்தான் அதற்கு இடம் என்றுவேறு சொன்னான்.

விரதம் இருந்தாள். அருளா பெற்றாள். அருளா ஆட்சிபுரிகிறது அங்கு. இருள். காமத்தின் கொலுமண்டபம் கோவில் என்பதை பண்டாரத்தின் சேட்டை அவளுக்கு உணர்த்தியது.

* * * *

கந்தப்பன் விபூதிப்பண்டாரம் இருவரும் நாட்டின் சாபக்கேடுகள். நல்ல வீட்டில் குடியிருக்கும் நச்சரவுகள்.

* * * *

இனிப்பு பூசப்பட்ட நஞ்சைப் பெற்றசுந்தரம். அவன் வேதனை பொறுக்க இயலாது அவளை ஆத்திரம் தீர வைதான். விபசாரி என்று அவன் நா மொழிந்தது.

விபசாரியானது யாரால் என்ற சிந்தனை அவனிடம் கிடையாது. அவன்வர்க்கத்தினருக்கு ஆணவம்இருக்குமேதவிர அறிவு என்ற ஒன்றிருப்பதில்லை.

* * * *

இப்பொழுது சொல்லுங்கள் ஏழ்மையின் கோரப் பிடியிலிருந்து தங்களை ஒரு சிறிது விடுவித்துக்கொள்ள, கூலிவேலைக்கு வரும் காமாட்சி போன்ற இளம் பெண்களின் கற்பைச் சூரையாடும் கந்தப்பர்கள் — பண்டாரங்கள்—சுந்தரங்கள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கவேண்டுமா? வேண்டாமா?

கதை, கட்டுரை, கவிதை எழுத்தாளர்களுக்கு

கவிதை: மகிழ்ச்சிக்கு ஒருபக்கம்வரக்கூடியதாக தொழிலாளர், ஏழை, எளியவர், உழவர், உழைப்பாளர் நிலைமை குறித்தும், அவர்கள் மேம்பாட்டிற்குகந்ததாகவும் உள்ள சீர்திருத்தக் கவிதைகளே வரவேற்கப்படும். காதல் சம்பந்தமான கவிதைகள் அனுப்பவேண்டாம்.

கதை: மகிழ்ச்சியின் நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குள் முடிவதாக இருக்கவேண்டும். **நீண்ட கதைகள் கவனிக்கப்படமாட்டாது.** குறைந்த பக்கங்களுள் முடிவடையக்கூடிய காதல் கதைகளுக்கும், தொழிலாளர், வறுமையாளர் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டும் கதைகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படும். 'நடந்த கதை' என்ற தலைப்பில் உண்மை நிகழ்ச்சிகளை கூறும் கதைகள் பிரத்தியேக சலுகையுடன் கவனித்து வெளியிடப்படும்.

கட்டுரை: மகிழ்ச்சி இரண்டு பக்கங்களுக்குள் அமையவேண்டும். நாடு, நாட்டுமக்கள், கலை, சினிமா இப்படிப் பொது விஷயங்களைக் குறித்து, மக்களும், அரசாங்கமும், ஏனையோரும் தெரிந்து ஒழுக வேண்டியதுபற்றி எழுதலாம்.

ருசிகர சம்பவங்கள்: புதுமைகள்—சிலேடைகள்—அறிஞர்களின் பொன்மொழிகள்—சிரிப்பு அலைகள் முதலியனவும் வரவேற்கப்படும்

குறிப்பு: எழுத்தோவியங்களுடன் எவரும் ஸ்டாம்பு வைத்து அனுப்பவேண்டாம். திரும்ப அனுப்பப்படமாட்டாது. ஸ்டாம்பு அனுப்புவது சந்தேக மனப்பான்மையை வளர்க்கிறது. நமது பத்திரிகை மாதம் ஒருமுறையானபடியால் கதை, கட்டுரைகள் தாமதித்துத் தான் முறைப்படி வெளிவரும். எனவே இதுசம்பந்தமாக எழுதும் கடிதங்களுக்கு பதில்போட இயலாது. கோபப்படுவதில் அர்த்தமுமில்லை.

முக்கிய குறிப்பு: ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களின் பத்திரிகை மகிழ்ச்சி.

மிக முக்கிய குறிப்பு: கதை, கட்டுரை முதலிய எதிலும் ஜாதிப்பெயர் இருக்கக்கூடாது.

திரைப்பட விமர்சனம்

மூன்று பிள்ளைகள்

'புரட்சிப்பித்தன்' மதுரை.

ஜெமினி திரையிட்டுள்ள 'மூன்று பிள்ளைகள்' மறக்க முடியாத மிகச் சிறந்த திரை ஓவியமாகத் திகழும் என பெரிதும் எதிர்பார்த்தபடி பிரமாதமாக அமையவில்லை. படத் தயாரிப்பில் பல ஆண்டுகள் பழுத்த அனுபவம் பெற்ற ஸ்தாபனம் ஜெமினி. மிகச் சிறந்த நவீன சாதனங்களும் சௌகரியங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஜெமினி ஸ்டுடியோவில், திறமையும் தேர்ச்சியும் படைத்த கலை நிபுணர்களின் உதவியைக்கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தாலும் பாமர மக்களைத் திருப்தி செய்யும் அளவுக்குக்கூட படம்சிறப்பாகஇல்லை. திரையில் முகம்தெரிந்தாலே தியேட்டரில் கலகலப்பு ஏற்படக்கூடிய நக்ஷத்திரங்கள் ராதா, ராமன், கணேசன், நாகேந்திரர், எல். நாராயணன், ராமசாமி; சேது, வனஜா, கண்ணம்பா, சுந்தரிபாய், சூரியப்பிரபா போன்ற பலர் சேர்ந்து நடித்திருக்கும்இப்படம் பெருத்த ஏமாற்றத்தை அளித்ததேன்?

அடிப்படையிலேயே ஆட்டங் கண்டுவிட்ட பலவீனமான கதையமைப்பு. கதை தாங்கியுள்ளகருத்துகளோ, அதில் பின்னப்பட்டுள்ள சம்பவங்களோ தமிழ்நாட்டுக்கு புதியதல்ல. இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிரம்பிய படங்கள் எத்தனையோ வெளிவந்துவிட்டன. எனவே, 'ஜெமினி'யிடம் புதுமையான அம்சத்தைஎதிர்பார்த்தமக்கள், 'மூன்று பிள்ளை'களிடம் அதிருப்திகொண்டதில் ஆச்சரியமில்லை. கண்ணீர் வடிக்கும் அபலைப் பெண்களின் சோக வரலாற்றை படமாக்கினால் பணப்பெட்டி நிரம்பும் என்ற எண்ணம் படத் தயாரிப்பாளர்களிடம் தலைதூக்கியிருக்கிறது. இந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை இப் படம் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. 'சம்சாரத்தில்' மாமி மருமகளை சித்திரவதை செய்தாள்; இப்படத்தில் மருமக்கள் மாமியை கொடுமைப்படுத்துகின்றனர். இது தான் வித்தியாசம்! நம்பத்தகாத முறையில் நடைமுறைக்கு மாறாக கதை அமைக்கப்பட்டதாலும், புளித்துப்போன பழைய கற்பனையில் படம் ஊறிப்போயிருப்பதாலும் ஜெமினி வெற்றிப்பாதையை விட்டு விலகிச் சென்றுவிட்டது.

கதை: அரிசி மண்டியிலே பொறுப்புள்ள ஒருபதவியிலிருக்கும் சோமசேகர், முதலாளி விரும்பியபடி கள்ளக் கணக்கு எழுத மறுத்ததால் வேலையை இழந்துவிடுகிறார். வேலையில்லா திண்டாட்டம்—அதன் விளைவு வறுமை—பசிப்பிணி இவற்றைத் தாங்கவொண்ணாது திருட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார். திருடிய பணம்கொண்டு சிலகாலம் சுகமாக வாழ்கிறார்.

ஆனால், தனிக்குடித்தனம்நடத்தி தரித்திரமானநிலைமையில் தத்தளிக்கும் மூத்தமகன் தனக்கு அவசர

மாக மூவாயிரம் ரூபாய் வேண்டுமெனத் தந்தையிடம் கேட்கிறுன். தனயனுக்காக மீண்டும் திருடச் செல்கிருர் சோமசேகர். ஆனல் இம்முறை தன்மகன்—கண்ணனின் காதலியின் வீட்டில் திருடி அகப்பட்டுக்கொள்கிருர். ஆனல் தந்திரமாக, தற்செயலாக அங்கிருந்த கண்ணன் தான் திருடியதாக ஒப்புக்கொள்கிருன். தன்மானம் இழந்த தந்தை அவமானத்தைப் பொறுக்க மாட்டாமல் தற்கொலை செய்து கொள்கிருர். நிரபராதி கண்ணன் விடுதலை செய்யப்பட்டு, வேலையின் நிமித்தம் சென்னைசென்று, படத் தயாரிப்பாளர் ஒருவரிடம் நடிகராகச் சேருகிருன். தனதாயை மூத்தஅண்ணன் முத்து கவனித்துக் கொள்வதற்காக மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் பணம் அனுப்புகிருன். ஆனல் குதிரைப் பந்தயத்தில் விரயம் செய்துவிட்டுத் தன் தாயையும் இழிவாக நடத்துகிருன் முத்து. இத்துடன் மருமகளின் தொல்லையையும் பொறுக்கமாட்டாத தாய் தன் இரண்டாவது மகன் வாழும் பம்பாய்க்குச் செல்கிருள். அங்கும் அவள் அவமதிக்கப்பட்டு சொந்த ஊருக்கே திரும்பி ஆலயம் ஒன்றில் பணிப்பெண்ணுக இருந்து வயிறு வளர்க்கிருள். தாயின்மீது உள்ள பாசத்தால் அவளைப் பார்க்க ஆவலுடன் ஊர்திரும்புகிருன் கண்ணன். காதலியின் உதவியால் ஆலயத்தில் தாயைச் சந்திக்கிருன். தான் அனுப்பிய பணம் தாயாரிடம் சேர்க்கப்படவில்லை என்பதைஅறிந்த கண்ணன் தன்தமயன்முத்துவை தாக்குகிருன் ஆனல் தாய் அதைத் தடுத்து, எல்லோரிடத்தும் ஒரே விதமான அன்பாகவே இருக்கிருள். தவறை உணர்ந்து, பிரிந்த சகோதரர்கள் சேர்கின்றனர்! கண்ணனுக்கும் கமலாவுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி அலுப்புத் தட்டும் கதை. விறுவிறுப்பை அதிகரித்து, ஆர்வத்தை தூண்டக்கூடிய வகையில் கதையில்லாதது பெருங்குறை. கதையமைப்பிலும் பெருங்குறைகள் காணப்படுகின்றன. மூன்று பிள்ளைகள் என்ற பெயருக்கு எற்ப மூவரைப்பற்றியும் விரிவாக விளக்கவில்லை. முத்து, கண்ணன் இருவர்மட்டும் எத்தகைய குணுதிசயங்களுள்ளவர்கள் என்பது தான் சித்தரிககப்பட்டுள்ளது. சேகரைப்பற்றி எதுவுமே படத்தில் குறிப்பிடப்படவில்லை; பாகம் மிகவும் குறைவு. கதைக்கு அந்தஇரண்டாவது பிள்ளை சேகரும் மகளும் அவசியமானவராக தெரியவில்லை. திடீரென்று ஒருநாள் இரவில் எப்படி, பல ஆயிரக் கணக்கில், எங்கிருந்து சோமசேகர் திருடினர்? திருட்டைப்பற்றி பணம்பறிகொடுத்தவன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையா? இந்தத் திடீர் குபேரனை அக்கம்பக்கத்திலுள்ளவர், கடன் கொடுத்த சேட் யாருமே சந்தேகப்படவில்லையா? தந்தையை மட்டும் தப்பிக்க விட்டுவிட்டு கண்ணன் மட்டும் ஏன் திருட்டுப்போன பொருளுடன் அங்கேயேநிற்கவேண்டும்? இருவருமே தப்பியிருக்கலாமல்லவா? பதினைந்தாயிரம் மூடை அரிசியை பதினைந்து மூடையாகத் திருத்தி கள்ளக் கணக்கு எழுதச் சொல்லிய முதலாளியை, நாட்டுப் பற்றும், நாணய உணர்ச்சியுமே உருக்கொண்டசோமசேகர் அதைப் பற்றி அரசாங்க அதிகாரிகளுக்கு

என் புகார் செய்யவில்லை? இது போன்ற எண்ணற்ற குறைகள் மலிந்திருக்கின்றன. அவை அனைத்தும் இங்கே கூறப்பட இடம் வசதியளிக்காது.

வசனம்: வேப்பத்தூர் கிட்டு மேற்பார்வையில் ஜெமினி கதை இலாகா எழுதியிருக்கும் வசனங்களைப்பற்றி புகழ்ந்து கூறும்படியாக எந்த கட்டத்திலும் நன்றாக அமையவில்லை. அனுபவமும் ஆற்றலும் உள்ள படித்த பட்டதாரிகள் நிறைந்த கதை இலாகா இத்துறையில் சிறிதளவுகூட முன்னேறவில்லை. படத்தின் வெற்றிக்கு கதைக்கு அடுத்தபடி 'வசனங்கள்'தான் அத்தியாவசியமானது என்பதை ஜெமினி உணரவேண்டும்.

நடிப்பு: கூடுமானவரை கொடுத்த பாகத்தை சிறப்பாக செய்துள்ளவர் கண்ணாம்பா ஒருவர்தான். அதற்கடுத்தபடி ராதாவைக் கூறலாம். இவருடைய நடிப்பு படத்திற்கு சற்று உயிரளிக்கிறது. என்றாலும 'சம்சாரம்'போல இதில்இவருடைய பாகம் சோபிக்கவில்லை. ஸ்ரீராமன் 'பரவாயில்லை' என்று சொல்லும்படியாக ஒருசில இடங்களில் மட்டுமே நடிக்க முயன்றிருக்கிறார். ஒரு அலுவலகத்தில் பொறுப்பான பதவியில் இருந்தவரான சோமசேகர் பாகத்தில் தோன்றும் நாகேந்திரர் நடிப்பும் பேச்சும் சுமார்தான். வேடப் பொருத்தமே கிடையாது. இவரது உடலமைப்பு—தோற்றம்—இவற்றைகவனிக்கும்போது 'ஆபீஸ் மானேஜராக' நம்ப முடியவில்லை முகபாவத்தின்மூலம் உணர்ச்சியை உருவகப்படுத்தும் நடிப்பில் தோல்விதான் காணுகிறார். வனஜா அழகாக கண்ணுக்கு கவர்ச்சியாக காட்சியளிக்கிறாரேதவிர, தன்பாகத்தை உணர்ந்து நடித்து முன்னணிக்கு வரவேண்டுமென்ற ஆர்வம் இருப்பதாக தெரியவில்லை. சோகக் கட்டங்களில் இவருடைய நடிப்பு போதாது. நாராயணன், விகடம் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் படத்திற்கு அவசியமில்லாமல் ஆக்ரமித்துக்கொண்டு படத்தின் விறுவிறுப்பையும் கதைப் போக்கையும் பாழ்படுத்துகின்றனர்.

நடனங்கள், பாடல்கள்: நடனங்களில் ஒன்றும் ரஸிகர்களின் கவனத்தைக் கவரும்படி எடுப்பாக இல்லை. பாடல்களும் குறிப்பிட்டு கூறும்படி நன்றாக இல்லை. ஓரிரு பாட்டுக்கள் பரவாயில்லைஎனகூறும்படி இருந்தாலும்கூட, அவை எப்போதும் நினைவில் நிற்கும்படியாக பிரபலமடையவில்லை.

பின்னணி இசையமைப்பு படம் முழுவதும் ஜீவனற்றுள்ளது. வேறு எந்த நல்ல அம்சங்களும் படத்தில் இடம்பெறவில்லை. சோமசேகரின் மனநிலையைவிவரிக்கும் கட்டத்தில் டைரக்டர் கையாளும் 'டெக்னிக்'

ஏற்கனவேவெளிவந்த படங்களிலே யேஇடம்பெற்றிருக்கிறது கதை,வசனம், பாடல், நடனம் ஆகிய எந்த கலையம்சமும் உயர்தரம்என கூறும் படி இல்லாததால் "மூன்று பிள்ளைகள்" ஒரு சாதாரண சமூகப் படம் தான். இதுபோன்ற சாதாரணப் படங்களை ஜெமினி தயாரிப்பது, மககள் ஜெம்னிமீது கொண்டிருக்கும் நல்ல அபிப்பிராயத்தை கெடுத்துவிடக்கூடும்.

'புரட்சிப்பித்தன்' எழுத மறந்த சில முக்கியகுறிப்புகள்: பங்களூர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு லோக்கல் தபாலாகவும், வேலூர் சிறையிலுள்ள கண்ணனுக்கு ஒரு தபாலுமாக, ஒரே நேரத்தில் சோமசேகரால் போடப்பட்டவை, கிடைக்கப் பெற்று உள்ளூர் வாசியும், 200 மைலுக்கப்பாலுள்ள கைதியும் ஒரே நேரத்தில் வந்து சேரும் விந்தை! 15000 மூடையை 15 மூடையாக மாற்றக் கூறும் கதை, வசனகர்த்தாக்களின் வர்த்தக மூளையின் தீட்சண்யம்!

செட்டிங்ஸ், ஒலி, ஒளிப்பதிவுகள், போட்டோகிராபி நனருக அமைந்துள்ளது.

ஞாபக சோதனைப் போட்டி 4 முடிவு
சரியான விடை

1	மஹாமாயா	6	வனராஜகார்ஜான்
2	பூகைலாஸ்	7	நந்தகுமார்
3	பிரஹலாதா	8	தர்ம தேவதா
4	மாந்ரு பூமி	9	வாமன அவதாரம்
5	பக்த சேதா	10	கதம்பம்

இப்போட்டிக்கு சரியான விடையனுப்பிய கீழ்க்கண்ட இருவருக்கும் பரிசுத் தொகை ரூபாய் 10ஐ சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூ. 5 வீதம் பரிசளிக்கப்பெற்றிருக்கிறது.

1 U. ராஜகோபாலன், 1கிர் ரோடு, மஞ்சக்கொல்லை.
நாகபட்டினம் போஸ்ட் (தஞ்சை ஜில்லா)

2 ச. இஞ்ஞாசிமுத்து,
5/36, ஆர் ஸி. வடக்குத் தெரு, சாத்தூர். S. I.

மகிழ்ச்சி விற்பனையாளர்கள்:

W. P. B. சுந்திரன்,
73, ச. பெ. முதலி தெரு,
புரசைப்பாக்கம்,
சென்னை 7.

C. K. பாலசுந்தரம்,
நியூஸ் ஏஜண்ட்,
24/20, கருப்பா கௌண்டர் வீதி,
கோயமுத்தூர்.

ஞாபக சோதனைப் போட்டி 5

[கட்டணம் கிடையாது]

முழுவதும் சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1	— — ல்
2	— — க —
3	— — கா — —
4	அ — — கா — —
5	— ல் — வி — — ம்
6	பக்த — — — — —
7	— ஸ் — — — ம் — ஞ் —
8	— ச — த — —
9	ஜெய — — —
10	— வ — —

பெயர்...

விலாசம்..

ஊர்.................................... ஜில்லா..

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால் இதுவரை வெளிவந்துள்ள **தமிழ்ப்** படங்களின் பெயர்கள் வரும்.

2 மேற்கண்ட கூப்பனை மையினால் பூர்த்தி செய்து, கவரில் வைத்து, "**ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்**" என்று எழுதி **31—8—52**க்குள் அனுப்பப்படவேண்டும். உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

3 **முதல் கூப்பன்** அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும், எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் ஒருவர் எழுதி யனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன் வீதம் எழுதப்படவேண்டும்

4 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

சினிமாச் செய்திகள்

"பெல்"

ஆன்

இந்தியாவின் முதல் டெக்னி கலர் படமான ஆன் ஆகஸ்ட் 7 முதல் தமிழ்நாட்டுத் திரைகளில் பவனி கிளம்பிவிட்டது. சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் பிரமாண்டமான செட்டிங்ஸ்களுடன் தயாரிக்கப்பட்ட இப்படம், முடிமன்னனை எதிர்த்த குடிமக்களின் பெரும்போராட்டத்தைக் கொண்ட காவியமாம். தமிழ்ப் பாடல்களை கம்பதாசனும், வசனத்தை பி. எஸ். ராமையாவும் தொகுத்துள்ளார்கள்.

ரத்தக் கண்ணீர்

நாடகமேடையில் பிரபலமான எம். ஆர். ராதாவின் அதே ரத்தக் கண்ணீரைத் திரையிட மதராஸ் நேஷனல் பிக்சர்ஸார் முன்வந்துள்ளார்களாம். பிரதம பாகத்தில் நீண்டநாட்களாக திரையுலகிலிருந்து அஞ்ஞாதவாசம் புரியும் எம். ஆர். ராதாவே நடிப்பாராம். மற்ற நடிகர், நடிகை ஜாப்தா பின்னால் அறிவிக்கிறோம்.

பணம்

எனெஸ்கே பிலிம்சாரின் மணமகன், மானத்தோடு வாழ் என நாமம் மாற்றப்பட்டு, கடைசியில் 'பணம்' என்று மகுடமிட தீர்மானித்துவிட்டனர். செப்டம்பர் 3வதுவாரத்தில் நிச்சயம் வெளிவருமெனஎதிர்பார்க்கலாம்

செல்லப்பிள்ளை

ஏ.வி.எம்.மின் அடுத்த வெளியீடான செல்லப்பிள்ளை தீபாவளிக்கு நிச்சயம் திரையிடப்படும். கே. ஆர். ராமசாமி, பி. கண்ணாம்பா நடிக்கின்றனர்.

ஏழை உழவன்

ஸ்ரீராஜராஜேஸ்வரி பிலிம்ஸார் தயாரித்துவரும் ஏழை உழவனை, ஜெமினியார் தங்களது மேற்பார்வையில் தீபாவளிக்கு முன்பே வெளியில் அனுப்பத்தீர்மானித்துவிட்டனர். கண்ணாம்பா, அஞ்சலி, ஸ்ரீராம், டி. ஆர். ராமச்சந்திரன் நடிக்கின்றனர்.

இம்மாத ரிலீஸ்

இம்மாதத்தில் நான்கு புதுப் படங்கள் வெளியாகி சினிமா ரசிகர்களை திகைக்க வைக்கப் போகிறது. இம்மாதம் 7ம்தேதி ஆன் (தமிழ்), 15உ கல்யாணம் பண்ணிப்பார் (தமிழ்), 22ம்தேதி சின்னத்துரை, இம்மாதக் கடைசியில் ஜமீன்தார். ரசிகர்களுக்கு பெரியதொரு விருந்துதான்!

ராஜாஜி பதில் சொல்வாரா?

ஜெமினி அதிபர் திரு. எஸ். எஸ். வாஸன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் சாராம்சமாவது:—

நமது முதன்மந்திரி திரு. ராஜாஜி சினிமாத் தொழிலைப்பற்றி ஓயாமல் பேசிவருகிறார். சமீபத்தில் அவர் பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் "சினிமாவுக்குப் போகாதீர்கள் ...சினிமாவினால் ஒரு நல்லதும் இல்லை" என்று கூறியிருக்கிறார். முன்பொருசமயம் சென்னைக்குப் பக்கத்தில் நடந்த கொள்ளையைப்பற்றி யாரோஒருவர் கேட்டதற்குக்கூட "எல்லாம் சினிமாவினால்தான்" என்று கூறியிருக்கிறார். நல்லவேளையாக ராமாயணம் இந்தக்காலத்தில்நடக்கவில்லை. இல்லையெனறால் "சீதையை ராவணன் தூக்கிச் சென்றதற்குக்கூட சினிமாதான் காரணம்" என்று கூறியிருப்பார். சினிமா ஒரு மாபெருந் தீமை என்று ராஜாஜி கருதினால் அது ஒரு நூதனமானகருத்துதான். அப்படியானால் அநேக துண்டுப்படங்களைத் தயாரித்து அனுப்பும் இந்திய சர்க்காரும், அவர்களின் பிலிம்ஸ் டிவிஷனும் இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

சினிமாவினால்பொதுஜனங்களின் ஒழுக்கம் கெட்டுவிடுவதாக ராஜாஜி குற்றம்சாட்டுகிறார். அப்படியானால் சர்க்காரின் பிலிம்தணிக்கைபோர்டு என்ன செய்கிறது? சினிமாப்படங்களில்உள்ள ஆட்சேபகரமான காட்சிகளைக் களைந்தெறிவதற்கென அறிவாளிகளைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள பிலிம் தணிக்கை போர்டு வேலைசெய்யவில்லை என்று அர்த்தமா? ராஜாஜி பதில்சொல்லட்டும்!

இதே ராஜாஜி 1938ல் சென்னை மாகாண பிரதமமந்திரியாக இருந்தபோது சென்னை கோகலேஹாலில் நடந்த "விமோசனம்" என்ற நாடக விழாவுக்குத் தலைமைதாங்கிப்பேசும்போது, அதையேசினிமாப்படமாக எடுக்குமாறு யோசனை கூறினர். அவரே இப்போது சினிமாவைக் குறைசொல்கிறார். இவ்வளவுதீவிரமாக தமது அபிப்ராயத்தை மாற்றுமாறு அப்படி என்ன நேர்ந்துவிட்டது. இதற்கு ராஜாஜி பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ராஜாஜி எத்தனைபடங்கள் பார்த்திருக்கிறார்? அவருடைய தார்மீக நியதியைப் புண்படுத்தும்படியாக எத்தனை படங்கள் இருந்தன? ஒரு சிலவற்றின் பெயரையாவது குறிப்பிடட்டும். அப்படி சினிமாவினால் கெடுதல்தான்என நினைப்பவரானால் தியேட்டர்களுக்கெல்லாம் லைசென்சு கிடையாது என்று சொல்லி மூடிவிடலாமே! ஆனால் ஒன்றுமட்டும் மிக முக்கியம். அவர் இம்மாதிரியான ஒரு சீர்திருத்ததுக்கு முதலெடுப்பாக மத்தியசர்க்காரின் சினிமாடோகிராப் இலாகாவை முதலில் மூடிவிடட்டும்.

மேலே எழுதப்பட்டுள்ள பிரச்சனைகள் ஒரு முக்கியமான தொழிலைப் பற்றியவை. எனவே அவற்றிற்கெல்லாம் ராஜாஜி திட்டமான பதில் அளிப்பாரா?

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

"எட்வர்ட் காபி ஒர்க்ஸ்"

காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

Regd. No. M. 5483. MAHILCHI Aug-Sep. 52.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எழுதும்
புதிய தொடர் கதை

முள்

மகிழ்ச்சி புரட்டாசி இதழில்
ஆரம்பமாகிறது!

உங்கள் பிரதிக்கு
உங்கள் ஊர் ஏஜண்டுகளிடம் பதிவு
செய்துகொள்ளுங்கள்.

ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 2—4—0

மகிழ்ச்சி இல்லம்,
விருதுநகர்.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.